20.11.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 'விவசாய மேளா - 2015' துவக்கம்

பெங்களூரு:விவசாயிகளுக்கு அதிநவீன தொழில் நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 'விவசாய மேளா - 2015' நேற்று துவங்கியது.

மழை பற்றாக்குறை, மின் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் விவசாயிகள் கடும் நெருக்கடியில் உள்ளனர். இதனால், விவசாயிகளுக்கு மண், தண்ணீர் சேமிப்பு, நிலத்தடி நீர்மட்டத்தை அபிவிருத்தி செய்யும் தொழில் நுட்பங்கள், மாற்று எரிபொருள் பயன்படுத்துவது, கால்நடை வளர்ப்பு, விவசாயத்தை லாபகரமான தொழிலாக்குவது உட்பட பல்வேறு விஷயங்கள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், ஆண்டுதோறும் 'விவசாய மேளா' நடத்தப்படுகிறது.

இந்த ஆண்டு பெங்களூரு விவசாய அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் விவசாயத்துறை இணைந்து நடத்தும், விவசாய மேளா - 2015, நான்கு நாள் கண்காட்சியை, பல்லாரி சாலையில் உள்ள காந்தி விவசாய விஞ்ஞான கேந்திராவில், கவர்னர் வஜுபாய் வாலா நேற்று துவக்கி வைத்தார். விவசாய மேளாவில், 600 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில், 350 கடைகள், விவசாயம் மற்றும் விவசாய தொழில் நுட்பத்துக்கு தொடர்புடையவை.

அது மட்டுமின்றி கிராமிய தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் குடிசை தொழில், கைத்தறி மற்றும் உணவு பாதுகாப்பு உட்பட பல்வேறு தொழில்களை செய்து வரும் சுயஉதவி குழுக்கள், விவசாயிகள் தாங்கள் தயாரித்துள்ள

பொருட்களை விற்பனை செய்ய வாய்ப்பளிக்க, கிராம சந்தையான, 'ஹள்ளி சந்தே' அமைக்கப்பட்டுள்ளது.விவசாயத்துறை தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கும் வகையில், 'நிபுணர்கள் செல்' அமைக்கப்பட்டு, ஆலோசனை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.தரிசு நிலத்தில் விவசாயம் செய்ய ஏற்ற பயிர்கள், தண்ணீரை சிக்கனமாக பயன் படுத்தி விவசாயம் செய்யும் முறை, ஒருங்கிணைந்த விவசாயம், கோழிப்பண்ணை, தோட்டக்கலை, மீன் வளர்ப்பு போன்றவற்றில் விவசாயிகள் லாபமடைவதற்கான ஆலோசனை வழங்கப்படுகிறது. மேளாவுக்கு மாநிலத்தின் வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், நகர மக்கள் உட்பட, 10 லட்சம் பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விவசாய மேளாவில் விவசாயத்தில் சாதனை செய்த விவசாயிகள் பாராட்டப்படுவர்.இங்கு வரும் விவசாயிகள், மக்களின் அனுகூலத்துக்காக, காந்தி விவசாய விஞ்ஞான கேந்திராவின் நுழைவு வாயிலில் இருந்து, 'விவசாய மேளா' வரை இலவச பஸ் வசதியும், குறைந்த விலையில் உணவு வசதியும் செய்யப்பட்டு உள்ளது.

**தமிழகத்தில் மழை: சபரிமலை 'வெறிச்'**



சபரிமலை:தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, அங்கிருந்து சபரிமலை வரும் பக்தர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது. சபரிமலையில், 17-ம் தேதி, மண்டல சீசன் துவங்கியது. சீசன் துவங்கி, மூன்று நாட்கள் கடந்த

நிலையிலும், சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் மிகக் குறைவாக உள்ளது. தமிழகத்தின் பல மாவட்டங்களிலும், தொடர்ந்து மழை பெய்து வருவதால், சபரிமலைக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. தமிழகத்தில், மழை பாதிப்பு குறைந்து, இயல்பு நிலை திரும்பிய பின்னரே, தமிழக பக்தர்கள் வருகை அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், சபரிமலையிலும், தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம், பம்பை நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால், பக்தர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். அசம்பாவிதங்களை தவிர்க்க, தீயணைப்பு படையினர் தயார் நிலையில் உள்ளனர்.

## வெள்ளம் பாதித்த மாவட்டங்களில்4 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி

தொற்றுநோய் பரவுவதை தடுப்பதற்காக, மழையால் பாதித்த வட மாவட்டங்களை சேர்ந்த, நான்கு லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி துவங்கியுள்ளது.இது குறித்து, கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்ததாவது:வட மாவட்டங்களான கடலூர், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஆடு, பசு, எருமை உள்ளிட்ட கால்நடைகளுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. இந்த மாவட்டங்களில், குறிப்பிட்ட சில பகுதிகளில், கால்நடைகளிடையே, சப்பை நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய் பரவும் ஆபத்து எப்போதும் அதிகம். அதனால் முன்னெச்சரிக்கையாக, ஒரு லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி நடந்து வந்தது. சமீபத்தில் பெய்த பெருமழையால், வட மாவட்டங்களின் அனைத்துப் பகுதிகளிலும் சப்பை நோய், தொண்டை அடைப்பான் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனால், அப்பகுதிகளில் உள்ள, நான்கு லட்சம் கால்நடைகளுக்கு இந்த நோய்களுக்கான தடுப்பூசியும், 'ஆந்த்ராக்ஸ்' தடுப்பூசியும் போடும் பணி துவங்கியுள்ளது.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## இன்று முதல் நான்கு நாட்களுக்கு கடலோர பகுதிகளில் கன மழை எச்சரிக்கை



சென்னை: 'அரபிக் கடலில் ஏற்பட்டுள்ள புதிய காற்று அழுத்த தாழ்வால், தமிழகம், புதுச்சேரியில், இன்று முதல், நான்கு நாட்களுக்கு மீண்டும் கன மழை பெய்யும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கடந்த வாரம் பெய்த மழை பாதிப்பில் இருந்து மீளாத நிலையில், மீண்டும் விடுக்கப்பட்டு உள்ள கன மழை எச்சரிக்கையால், பொதுமக்களிடம் பீதி ஏற்பட்டுள்ளது.வங்கக் கடலில் ஏற்பட்ட காற்று அழுத்த தாழ்வு மண்டலத்தால், நேற்றுடன் முடிந்த, ஒரு வாரத்தில், சென்னையில் மிக அதிகபட்சமாக, 44 செ.மீ., மழை பெய்துள்ளது. தமிழகத்தில், 25 மாவட்டங்களில் சராசரி மழையை விட கூடுதல் மழை பெய்தது.சென்னை, கடலூர் மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. ன்னை, புறநகர் பகுதிகளில் தேங்கிய மழைநீர் நேற்று வரை வடிந்து வருகிறது. இந்நிலையில், அரபிக் கடலில் லட்சத் தீவு அருகே, புதிதாக காற்று அழுத்த தாழ்வு உருவாகி உள்ளதாக, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

### தொடர் மழை:

இதுகுறித்து, வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கை:வங்கக் கடலில் உருவான காற்று மேலடுக்கு சுழற்சி இடம் பெயர்ந்து, அரபிக் கடலின் தென் கிழக்கு பகுதியில், லட்சத் தீவு அருகே, புதிய காற்று அழுத்த தாழ்வு பகுதியாக,

நேற்று காலை உருவாகி உள்ளது. இது தீவிரமடைந்து, கேரளா, தமிழகம், புதுச்சேரி கடலோர பகுதிகளை நோக்கி நகரும். இதனால், நவ., 23 வரை, நான்கு நாட்களுக்கு கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இன்று, தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பெய்யும். நாளை முதல், திங்கள்கிழமை வரை, கடலோர பகுதிகளில் கன மழை பெய்யலாம். எனவே, இந்த வார இறுதி வரை கடலோர பகுதிகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும்.அடுத்ததுஅமெரிக்க வானிலை கணிப்பு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'நவ., 25ல், வங்க கடலில், அந்தமான் தீவு பகுதியில் உருவாகும் காற்று அழுத்த தாழ்வு நிலையால், தமிழகத்தில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என தெரிவித்துள்ளது. இதை, இந்திய வானிலை ஆய்வு மையம் உறுதி செய்துள்ளது.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.எனவே, இம்மாத இறுதி வரை கன மழை தொடரும் என, கணிக்கப்பட்டுள்ளது.

## தேனி ஆறுகளில் வெள்ளப்பெருக்குவைகை ஒரே நாளில் 1.55 அடி உயர்வு

தேனி:தேனி மாவட்ட ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் வைகை அணை நீர்மட்டம் ஒரே நாளில் ஒன்றரை அடி உயர்ந்தது. வினாடிக்கு 5 ஆயிரம் கன அடிநீர் வரத்து உள்ளது.
தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. உத்தமபாளையம், கூடலுார், தேக்கடியில் பெய்த கனமழையால் முல்லைப் பெரியாறு, கொட்டக்குடி ஆறு, வராக நதி, வைகை ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வைகை அணைக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கன அடிநீர் வரத்து உள்ளது.வைகை அணையில் நேற்று காலை நிலவரப்படி 57.64 அடியாக (மொத்த உயரம் 71 அடி) இருந்த நீர் மட்டம், மாலையில் 59.19 அடியாக உயர்ந்தது; ஒரே நாளில் 1.55 அடி உயர்ந்துள்ளது.
பெரியாறு அணை நீர் மட்டம் 131.60 அடி. அணைக்கு வினாடிக்கு 1870 கன அடி நீர்வரத்தும், 511 கன அடிநீர் வெளியேற்றமும் உள்ளது. சோத்துப்பாறை அணை முழு உயரத்தை (126.28 அடி) எட்டியது. ஒரு வினாடிக்கு அணைக்கு வரும் 540 கன அடிநீர் அப்படியே வெறியேற்றப்படு

கிறது. மஞ்சளாறு அணையின் நீர் மட்டம் 56.50 அடி. (மொத்த உயரம் 57அடி). ஒரு வினாடிக்கு அணைக்கு வரும் 198 கன அடிநீர் அப்படியே வெளியேற்றப்படு
கிறது.மழை அளவு விபரம் (மி.மீ.,):அரண்மனைப்புதுார் 28, போடி 29.4, கூடலுார் 85, மஞ்சளாறு 45, பெரியகுளம் 12.4, பெரியாறு 18.4, சோத்துப்பாறை 24, தேக்கடி 14.4, உத்தமபாளையம் 91, வீரபாண்டி 4.4.ஒரேநாள் இரவில் மட்டும் மாவட்டத்தில் 332.40 மி.மீ., மழை பதிவாகியது.

**சபரிமலை சீசனுக்காக கேரளா செல்லும் பூசணி**



சிவகங்கை,:சபரிமலை சீசனையொட்டி சிவகங்கை அரசனுாரில் விளைந்த வெள்ளை பூசணி கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது.சிவகங்கை அருகே அரசனுார், படமாத்துார், இலுப்பக்குடி, ஏஆர்., உசிலம்பட்டி உட்பட சுற்றுப்புற கிராமங்களில் விவசாயிகள் கிணற்று பாசனம் மூலம் கரும்பு, வெண்டை, கத்தரி, மிளகாய், வெள்ளை பூசணி, வெங்காயம் நடவு செய்துள்ளனர். இங்கு விளையும் காய்கறிகள் சிவகங்கை, மதுரை, திருநெல்வேலி,கேரளாவிற்கு அதிகம் செல்கிறது.

கேரளா செல்லும் பூசணி: தற்போது சபரிமலை சீசன் என்பதால்,அங்கு வெள்ளை பூசணிக்காய்க்கு தேவை அதிகம் உள்ளது. இதற்காக, அரசனுாரில் இருந்து கேரளாவிற்கு வெள்ளை பூசணி அனுப்பப்படுகிறது. விவசாயி அய்யப்பன் கூறுகையில்,“ 3 ஏக்கரில் அரசின் 75 சதவீத மானியத்தில்,

சொட்டு நீர் பாசனம் அமைத்தேன். ஆடியில் வெள்ளை பூசணி நடவு செய்து, தற்போது அறுவடை செய்கிறேன். ஏக்கருக்கு 15 டன் வரை விளைச்சல் உள்ளது. காய் ஒன்று 2 முதல் 15 கிலோ எடை இருக்கும். இது வரை கிலோ ரூ.2க்கு மட்டுமே வியாபாரிகள் பூசணியை எடுத்து வந்தனர். சபரிமலை சீசன் துவங்கியதால், கேரளா வியாபாரிகள் கிலோ ரூ.6க்கு எடுப்பதாக கூறியுள்ளனர். அல்வா தயாரிக்கவும்,இந்த பூசணியை வாங்கி செல்கின்றனர். ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் செலவு செய்து, கிலோவிற்கு ரூ.5க்கு மேல் விலை கிடைத்தால் மட்டுமே, ஓரளவு லாபம் கிடைக்கும்," என்றார்.

**மீன், கருவாடு விலை எகிறியது**

ராமநாதபுரம்,: தொடர் மழை, வரத்து குறைவால் பாம்பனில் கருவாடு விலை உயர்ந்தன.சில தினங்களுக்கு முன் வங்க கடலில் ஏற்பட்ட காற்று அழுத்த தாழ்வு நிலையால் மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டது. இதனால் பாம்பனில் மீன் வரத்து குறைந்து விலையும் உயர்ந்தது. சில தினங்களுக்கு முன் கிலோ ரூ.250 க்கு விற்ற வஞ்சிரம் ரூ.350 ஆக உயர்ந்தது. ரூ.180 க்கு விற்ற ஊளி ரூ.250 க்கும், ரூ.60 க்கு விற்ற நெத்திலி ரூ.130 க்கும், ரூ.160 க்கு விற்ற விளை மீன் ரூ.280 க்கும், ரூ.70 க்கு விற்ற குமுளா ரூ.140க் கும் விற்றன. ரூ.22 க்கு விற்ற காரல் ரூ.43 க்கும், ரூ.200க்கு விற்ற பாரை ரூ.300க்கும், ரூ.12 க்கு விற்ற சூடை ரூ.35 க்கும், ரூ.40 க்கு விற்ற முரல் ரூ.130க்கும், ரூ.190க்கு விற்ற கிழங்கான் ரூ.300க்கும், ரூ.60க்கு விற்ற நகரை ரூ.90க்கும், ரூ.230க்கு விற்ற நண்டு ரூ.350க்கும் விற்பனையாகின. அதேபோல் ரூ.200க்கு விற்ற சீலா கருவாடு ரூ.450 க்கும், ரூ.200 க்கு விற்ற நெத்திலி கருவாடு ரூ.250க்கும், ரூ.150 க்கு விற்ற பாரை கருவாடு ரூ.250 க்கும் விற்பனையாகின.

**முகத்துவாரத்தை ஆழப்படுத்தும் மீனவர்கள்**



பழவேற்காடு: பழவேற்காடு மீனவ கிராமங்களை, சூழ்ந்துள்ள மழைநீரை கடலுக்கு கொண்டு செல்ல, முகத்துவாரத்தை ஆழப்படுத்தும் பணியில், ஏழு மீனவ கிராமங்களை சேர்ந்த, 2,000 பேர் ஈடுபட்டு உள்ளனர்.பழவேற்காடு ஏரி, 15 ஆயிரம் சதுர கி.மீ., பரப்பளவில், இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரிய உவர்ப்பு நீர் ஏரியாக உள்ளது. அதில், மீன், நண்டு, இறால், மெல்லுடலிகள் என, பல வகையான உயிரிகள் வாழ்கின்றன.அந்த ஏரியில், நடுவூர்மாதகுப்பம், கோட்டைகுப்பம், அண்ணாமலைச்சேரி உள்ளிட்ட, 40 மீனவ கிராமங்களைச் சேர்ந்த, 40 ஆயிரம் மீனவர்கள் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர்.அந்த ஏரிக்கு அருகேயுள்ள முகத்துவார பகுதி மேடானதால், ஏரிக்கு கடல் நீர் வருவதில் சிக்கல் ஏற்பட்டது. ஆற்று நீரும் வராததால், ஏரி வறண்டு காணப்பட்டது. இதனால், முகத்துவாரத்தை ஆழப்படுத்தித்தர வேண்டும் என, மீனவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.இந்நிலையில், சில நாட்களாக பெய்த கனமழையாலும், ஆரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்காலும், 20 ஆண்டுகளுக்கு பின் பழவேற்காடு ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.ஏரி நிரம்பி அதன் உபரிநீர் கடலுக்குள் செல்ல வழியின்றி, ஏரியை ஒட்டிய மீனவ கிராமங்களை வெள்ளம் சூழ்ந்தது. இதனால், அப்பகுதிவாசிகளின் இயல்பு வாழ்க்கை பாதித்தது. இதையடுத்து, நடுவூர்மாதகுப்பம், கோட்டைகுப்பம், இடமணிகுப்பம், ஆண்டிகுப்பம், தோணிரவு, லைட் அவுஸ்குப்பம், செம்பாசிபள்ளிகுப்பம் ஆகிய

ஏழு கிராமங்களைச் சேர்ந்த, 2,000 மீனவர்கள், பொதுப்பணி துறையின் அனுமதி பெற்று, முகத்துவாரத்தை துார்வாரும் பணியை நேற்று துவக்கினர்.அதில், மண் திட்டுக்களால் துார்ந்த முகத்துவாரத்தில், 100 மீட்டர் நீளத்தில், 20 மீட்டர் அகலத்திற்கு, கால்வாய் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு உள்ளனர். இதற்காகும் செலவினங்களை, மீனவர்களே செலவிட்டு வருகின்றனர். பொதுப்பணி துறை பொறியாளர் ஒருவர் கூறுகையில், 'மீனவ கிராமங்களை சூழ்ந்த மழைநீர் வடிய வழியின்றி இருப்பதால், முகத்துவாரத்தை துார்வார அனுமதித்து உள்ளோர். அதற்காகும் செலவை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

இரையை தேடி!

பழவேற்காடு மீனவ கிராமங்களை மழைநீர் சூழ்ந்துஉள்ளதால், கால்நடைகள் மேய்ச்சலுக்கு இடமின்றி தவித்து வருகின்றன.எருமை மாடுகள் தண்ணீரில் நீந்தி, மழைநீர் இல்லாத பகுதிகளுக்கு, இரை தேடி சுற்றி வருகின்றன.மாடு, ஆடுகளை வளர்ப்பவர்கள், வெளியிடங்களில் இருந்து, தீவனங்களை கொண்டு வந்து அவற்றிற்கு கொடுத்து வருகின்றனர்.

## மேட்டூரில் நீர் திறப்பு

மேட்டூர்,:மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாயிலிருந்து, 14 நாட்களுக்கு பின், பாசனத்துக்கு நீர் திறந்துவிடப்பட்டு உள்ளது.சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து, கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய்களில், ஆக., 20ம் தேதி, பாசனத்திற்காக நீர் திறக்கப்பட்டது. இதன்மூலம், சேலம், ஈரோடு, நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பயனடைந்தனர்.இதற்கிடையே, வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததால், வினாடிக்கு, 400 கனஅடியாக இருந்த கால்வாய் நீர்திறப்பு, கடந்த 5ம் தேதி நிறுத்தப்பட்டது. இந்நிலையில், 14 நாட்களுக்கு பின், நேற்று மேட்டூர் அணையில், கிழக்கு

மற்றும் மேற்கு கால்வாயிலிருந்து வினாடிக்கு, 400 கனஅடி நீர் திறக்கப்பட்டது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### நெல்லையில் விடிய விடிய மழை

திருநெல்வேலி: நெல்லை மாவட்டத்தில் ஒரு வார இடைவேளைக்கு பிறகு நேற்று மழை கொட்டித்தீர்த்தது.திருநெல்வேலி மாவட்டத்தில் தீபாவளிக்கு முன் கன மழை பெய்தது. பின், நேற்று முன்தினம் மாலையில் மழை பெய்தது. நேற்று மாலை 4 மணிக்கு துவங்கிய மழை இரவு வரையிலும் தொடர்ந்தது.சங்கரன்கோவிலில் 139 மி.மீ., மழை பதிவானது. ராதாபுரம், வி.கே.புதுாரில் 104 மி.மீ., நெல்லையில் 102 மி.மீ., ஆய்க்குடியில் 100 மி.மீ., மழை பெய்தது.நெல்லை மனகாவலம்பிள்ளை நகர், சாந்திநகர், அண்ணாநகர், கக்கன்நகர், அருந்ததியர்காலனி பகுதிகளில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. பாதிக்கப்பட்ட மக்கள் பள்ளி கட்டடங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

### தேனி வாழையாற்றில் வெள்ளப்பெருக்குமக்கள் வெளியேற்றம்



தேனி: தேனி வாழையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு விளை நிலங்களில் புகுந்தது. முன் எச்சரிக்கையாக, நள்ளிரவில் அப்பகுதியினர் வெளியேற்றப்பட்டனர்.

தேனி மாவட்ட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்தது. இதனால், போடி கொட்டகுடி ஆற்றிலும், பூதிப்புரம் வாழையாறு, கல்லாறு பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு

ஏற்பட்டது.வாழையாற்றில் கரைபுரண்ட காட்டாற்று வெள்ளம் திசைமாறி பூதிப்புரத்தில் நிலங்களுக்குள் புகுந்தது. அதில் இருந்த 2 கிணறுகளை மூடியது. மண் அரிப்பு ஏற்பட்டு 5 ஏக்கர் நிலம் சேதமடைந்தது. கொட்டகுடி ஆற்றில் நேற்று நள்ளிரவு க மணிக்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தேனி கொட்டகுடி பாலத்திற்கு கீழ் பழனிச்செட்டிபட்டி ஜவஹர்நகர் பகுதியில் 450 வீடுகள் உள்ளன. கொட்டகுடி ஆற்றில் வந்த வெள்ளம் தடுப்பு சுவரை உடைத்து ஜவஹர் நகருக்குள் புகுந்தது. போலீசார் 'ஹலோ போலீஸ்' வாகனம் மூலம் 'சைரன்' ஒலி எழுப்பி வீடுகளில் துாங்கி கொண்டிருந்த பொதுமக்களை உஷார்படுத்தினர்.

பின் 'மைக்' மூலம் 'வீடுகளுக்குள் வெள்ளம் புக வாய்ப்பு உள்ளதால், உடனடியாக வெளியேறி பாதுகாப்பான இடத்திற்கு செல்ல அறிவுறுத்தினர். இதனால் அப்பகுதியினர் தேனி மெயின் ரோட்டிற்கு வந்தனர். சிலர் அருகில் உள்ள மண்டபத்திலும், தனியார் ஆலையிலும் தங்க வைக்கப்பட்டனர்.

**மழை நிவாரணம்: வி.ஏ.ஓ.,க்கள் முடிவு**

சென்னை: 'அரசின் வெள்ள நிவாரண பணிக்கு, ஒருநாள் ஊதியம் வழங்கப்படும்' என, தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலரான, வி.ஏ.ஓ.,க்களின் சங்கம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து, சங்க மாநில தலைவர் சுப்ரமணியன் கூறுகையில், "அரசின் துயர் துடைப்பு பணிக்கு உதவும் வகையில், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்க உறுப்பினர்கள், தங்களின் நவம்பர் மாத சம்பளத்தில், ஒருநாள் ஊதியம் வழங்க உள்ளோம்," என்றார்.

**ஆடு, மாடு, கோழிக்குமும்மடங்கு நிவாரணம்**

காஞ்சிபுரம், கடலுார் மாவட்டங்களில், மழை வெள்ளத்தில் கோழிகள் மற்றும் கால்நடைகளை இழந்தவர்களுக்கு, மூன்று மடங்கு நிவாரணத் தொகை கிடைக்க உள்ளது.இது குறித்து, அரசு வட்டாரம் கூறியதாவது:வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட கடலுார் மாவட்டத்தில், 20 ஆயிரம் கோழிகள், 479 ஆடுகள், 138 கால்நடைகள், 273 கன்றுகள் உயிரிழந்துள்ளன. அதைத் தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்டத்தில், 21 கால்நடைகள், 59 ஆடுகள், 18,280 கோழிகள் பலியாகியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

வழக்கமாக புயல், வெள்ளத்தில் உயிரிழக்கும் மாடுகளுக்கு தலா, 10 ஆயிரம் ரூபாய்; கன்றுக்கு, 5,000; ஆட்டுக்கு, 1,000; கோழிக்கு தலா, 30 ரூபாய் வீதம் இழப்பீடு வழங்கப்படும். ஆனால் தற்போது, இழப்பீட்டுத் தொகை, மூன்று முதல் மூன்றரை மடங்கு வரை உயர்த்தப்பட்டுள்ளது. எனவே கடலூர், காஞ்சி மாவட்டங்களில், கால்நடைகளை இழந்தவர்களுக்கு கூடுதல் தொகை கிடைக்க உள்ளது. மாடு ஒன்றுக்கு, 30 ஆயிரம் ரூபாய்; கன்று, 16 ஆயிரம்; ஆடு, 3,000; கோழி, 100 ரூபாய் என, இழப்பீடுத் தொகை வழங்கப்பட உள்ளது. இவ்வாறு அரசு வட்டாரம் தெரிவித்தது.

**பிளாஸ்டிக் பைகளை தவிர்த்தால்தங்கம், வெள்ளி வெல்லலாம்!**

வேலூர்:'திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவில், பிளாஸ்டிக் பைகளை தவிர்த்தால், தங்கம் மற்றும் வெள்ளி நாணயம் பரிசாக வழங்கப்படும்' என, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. தி.மலை அண்ணாமலையார் கோவில் கார்த்திகை தீபத் திருவிழா, 16ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. வரும் 25ம் தேதி அதிகாலை, 4:00 மணிக்கு பரணி தீபமும்; மாலை, 6:00 மணிக்கு 2,668 அடி உயரமுள்ள மலை உச்சியில் மகா தீபமும் ஏற்றப்பட உள்ளது. தீபத் திருவிழாவிற்கு வரும் பக்தர்கள், பிளாஸ்டிக் பைகளை தவிர்த்து, துணிப்பை, சணல் பை அல்லது சுற்றுச்சூழலுக்கு உகந்த பைகளை பயன்படுத்துமாறு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. அவ்வாறு பிளாஸ்டிக் பைகளை தவிர்க்கும் பக்தர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிகளுக்கு, தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை பரிசாக வழங்க, மாவட்ட நிர்வாகம் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் திட்டமிட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட கலெக்டர் மேற்கொண்டுள்ளார். தி.மலையில் 'செல்பி'க்கு தடைதிருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவில், மகா தீபம் ஏற்றும் மலையில், 'செல்பி' எடுக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.திருவண்ணாமலையில், வரும், 25ம் தேதி கார்த்திகை மகா தீபம் ஏற்றப்படவுள்ளது. 2,668 அடி உயர மலையின் உச்சியில் ஏற்றப்படும் தீபத்தைக் காண லட்சக்கணக்கான பக்தர்கள் ஒன்று கூடுவர். இதனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தீயணைப்பு

படையினர் தயார் நிலையில் இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. போலீசார், தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், அசம்பாவிதங்களை தவிர்க்க, பக்தர்கள், செல்பி எடுக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

**50 ஆயிரம் கிலோ காய்கறிக்கு வரவேற்பு**

மலிவு விலை காய்கறி கடைகளுக்கு, நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. சென்னையில், 42; கோவை, 10; மதுரை, நான்கு; துாத்துக்குடி, திருவண்ணாமலையில், தலா ஒன்று என மொத்தம், 58 மலிவு விலை காய்கறி கடைகள் உள்ளன. வெளிச்சந்தையை விட, குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

கடந்த இரு வாரங்களாக, மழை பெய்து வருவதால், காய்கறி விலை கடுமையாக உயர்ந்தது. இதையடுத்து, சென்னையின், முக்கிய பகுதிகளில் கூடுத லாக, 50 மலிவு விலை காய்கறி கடைகளை அரசு, நேற்று முன்தினம் திறந்தது.

இதற்கு, மக்களிடம் வரவேற்பு காணப்படுவதால், கடை திறந்த இரண்டு மணி நேரத்திற்குள், மொத்த காய்கறியும் விற்று விடுகின்றன. ஆனால், இந்த வியாபாரத்தில், ரேஷன் ஊழியர்கள் ஈடுபடுத்தப்படுவதால், ரேஷன் கடை பணியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர். இதுகுறித்து அவர்கள் கூறுகையில், 'ரேஷன் கடை முன் தான், காய்கறி விற்கிறோம். காலை, 8:30 மணிக்கு, காய்கறி விற்ற பின், ரேஷன் வழங்கும்படி கூறுகின்றனர்; இதனால், கூடுதல் பணிச்சுமை ஏற்பட்டு உள்ளது' என்றனர். இது குறித்து, கூட்டுறவு துறை அதிகாரிகள் கூறியதாவது: ஒரு கடைக்கு, தலா, 50 கிலோ வெங்காயம், தக்காளி; 15 கிலோ உருளை, கத்தரி, புடலங்காய், வெண்டை, பீட்ரூட் வழங்கப்படுகிறது. இரு தினங்களில், சென்னையில், 50 ஆயிரம் கிலோ காய்கறி விற்பனையாகி உள்ளது. மக்களின் தேவையை பொறுத்து, கூடுதல் காய்கறி விற்பனைக்கு அனுப்பப்படும். தற்காலிக கடை என்பதால், ரேஷன் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**இன்று முதல் நான்கு நாட்களுக்கு கடலோர பகுதிகளில் கன மழை எச்சரிக்கை**



சென்னை: 'அரபிக் கடலில் ஏற்பட்டுள்ள புதிய காற்று அழுத்த தாழ்வால், தமிழகம், புதுச்சேரியில், இன்று முதல், நான்கு நாட்களுக்கு மீண்டும் கன மழை பெய்யும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

கடந்த வாரம் பெய்த மழை பாதிப்பில் இருந்து மீளாத நிலையில், மீண்டும் விடுக்கப்பட்டு உள்ள கன மழை எச்சரிக்கையால், பொதுமக்களிடம் பீதி ஏற்பட்டுள்ளது.வங்கக் கடலில் ஏற்பட்ட காற்று அழுத்த தாழ்வு மண்டலத்தால், நேற்றுடன் முடிந்த, ஒரு வாரத்தில், சென்னையில் மிக அதிகபட்சமாக, 44 செ.மீ., மழை பெய்துள்ளது. தமிழகத்தில், 25 மாவட்டங்களில் சராசரி மழையை விட கூடுதல் மழை பெய்தது.சென்னை, கடலூர் மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. சென்னை, புறநகர் பகுதிகளில் தேங்கிய மழைநீர் நேற்று வரை வடிந்து வருகிறது. இந்நிலையில், அரபிக் கடலில் லட்சத் தீவு அருகே, புதிதாக காற்று அழுத்த தாழ்வு உருவாகி உள்ளதாக, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

### தொடர் மழை:

இதுகுறித்து, வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கை:வங்கக் கடலில் உருவான காற்று மேலடுக்கு சுழற்சி இடம் பெயர்ந்து, அரபிக் கடலின் தென் கிழக்கு பகுதியில், லட்சத் தீவு அருகே, புதிய காற்று அழுத்த தாழ்வு பகுதியாக,

நேற்று காலை உருவாகி உள்ளது. இது தீவிரமடைந்து, கேரளா, தமிழகம், புதுச்சேரி கடலோர பகுதிகளை நோக்கி நகரும். இதனால், நவ., 23 வரை, நான்கு நாட்களுக்கு கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இன்று, தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பெய்யும். நாளை முதல், திங்கள்கிழமை வரை, கடலோர பகுதிகளில் கன மழை பெய்யலாம். எனவே, இந்த வார இறுதி வரை கடலோர பகுதிகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும்.அடுத்ததுஅமெரிக்க வானிலை கணிப்பு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'நவ., 25ல், வங்க கடலில், அந்தமான் தீவு பகுதியில் உருவாகும் காற்று அழுத்த தாழ்வு நிலையால், தமிழகத்தில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என தெரிவித்துள்ளது. இதை, இந்திய வானிலை ஆய்வு மையம் உறுதி செய்துள்ளது.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.எனவே, இம்மாத இறுதி வரை கன மழை தொடரும் என, கணிக்கப்பட்டுள்ளது.

### தேனி ஆறுகளில் வெள்ளப்பெருக்குவைகை ஒரே நாளில் 1.55 அடி உயர்வு

தேனி:தேனி மாவட்ட ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் வைகை அணை நீர்மட்டம் ஒரே நாளில் ஒன்றரை அடி உயர்ந்தது. வினாடிக்கு 5 ஆயிரம் கன அடிநீர் வரத்து உள்ளது.தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. உத்தமபாளையம், கூடலூர், தேக்கடியில் பெய்த கனமழையால் முல்லைப் பெரியாறு, கொட்டக்குடி ஆறு, வராக நதி, வைகை ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வைகை அணைக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கன அடிநீர் வரத்து உள்ளது.வைகை அணையில் நேற்று காலை நிலவரப்படி 57.64 அடியாக (மொத்த உயரம் 71 அடி) இருந்த நீர் மட்டம், மாலையில் 59.19 அடியாக உயர்ந்தது; ஒரே நாளில் 1.55 அடி உயர்ந்துள்ளது. பெரியாறு அணை நீர் மட்டம் 131.60 அடி. அணைக்கு வினாடிக்கு 1870 கன அடி நீர்வரத்தும், 511 கன அடிநீர் வெளியேற்றமும் உள்ளது. சோத்துப்பாறை அணை முழு உயரத்தை (126.28 அடி) எட்டியது. ஒரு வினாடிக்கு அணைக்கு வரும் 540 கன அடிநீர் அப்படியே வெறியேற்றப்படு கிறது. மஞ்சளாறு அணையின் நீர் மட்டம் 56.50 அடி. (மொத்த உயரம் 57அடி).

ஒரு வினாடிக்கு அணைக்கு வரும் 198 கன அடிநீர் அப்படியே வெளியேற்றப்படு

கிறது.மழை அளவு விபரம் (மி.மீ.,):அரண்மனைப்புதுார் 28, போடி 29.4, கூடலுார் 85, மஞ்சளாறு 45, பெரியகுளம் 12.4, பெரியாறு 18.4, சோத்துப்பாறை 24, தேக்கடி 14.4, உத்தமபாளையம் 91, வீரபாண்டி 4.4.ஒரேநாள் இரவில் மட்டும் மாவட்டத்தில் 332.40 மி.மீ., மழை பதிவாகியது.

**நெல்லையில் விடிய விடிய மழை**

திருநெல்வேலி: நெல்லை மாவட்டத்தில் ஒரு வார இடைவேளைக்கு பிறகு நேற்று மழை கொட்டித்தீர்த்தது.திருநெல்வேலி மாவட்டத்தில் தீபாவளிக்கு முன் கன மழை பெய்தது. பின், நேற்று முன்தினம் மாலையில் மழை பெய்தது. நேற்று மாலை 4 மணிக்கு துவங்கிய மழை இரவு வரையிலும் தொடர்ந்தது.சங்கரன்கோவிலில் 139 மி.மீ., மழை பதிவானது. ராதாபுரம், வி.கே.புதுாரில் 104 மி.மீ., நெல்லையில் 102 மி.மீ., ஆய்க்குடியில் 100 மி.மீ., மழை பெய்தது.நெல்லை மனகாவலம்பிள்ளை நகர், சாந்திநகர், அண்ணாநகர், கக்கன்நகர், அருந்ததியர்காலனி பகுதிகளில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. பாதிக்கப்பட்ட மக்கள் பள்ளி கட்டடங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

**மழை நீடிப்பால் 6,415 விவசாயிகள் பாதிப்பு**

வாலாஜாபாத் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஒரு வாரமாக பெய்த கனமழையால், 19,138 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளன. இதன் மூலம், 6,415 விவசாயிகள் பாதிப்படைந்து உள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், சம்பா பருவத்தில், 30 ஏக்கர் நிலப்பரப்பில், விவசாயம் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.வடகிழக்கு பருவமழையால், ஒரு வாரமாக நீடித்து வரும் கனமழையால், 18,747 ஏக்கர் நெற்பயிர்; 361 ஏக்கர் கரும்பு; 30 ஏக்கர் வேர்க்கடலை என, மொத்தம், 19,138 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக, 6,292 பேர் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள்; 108 பேர் கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள்; 15 பேர் வேர்க்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள் என, மொத்தம், 6,415 விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். குறிப்பாக, வாலாஜாபாத், படப்பை மற்றும்

திருக்கழுக்குன்றம் ஒன்றியங்களில் அறுவடை பருவத்தில் இருக்கும் பயிர்கள், 4,015 ஏக்கர் முழுமையாக நீரில் மூழ்கி பாதிக்கப்பட்டு உள்ளன.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம் ரத்து

காஞ்சிபுரம் : இன்று நடைபெறவிருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம், தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்படுவதாக, மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி விடுத்துள்ள செய்திக் குறிப்பு: விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாதந்தோறும் மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நடைபெற்று வருகிறது. நவம்பர் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம், இம்மாதம் 20ம் தேதி நடைபெறுவதாக, ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெய்த கனமழையால், பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால், தேதி குறிப்பிடாமல், விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து 4,500 கன அடி நீர் வெளியேற்றம்

திருவள்ளூர் : பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து, உபரி நீர், நேற்று, வினாடிக்கு, 4,500 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்பட்டது.திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கத்தின் மொத்த உயரமான, 35 அடியில் தற்போது, 33.85 அடி உயரத்தில் தண்ணீர் நிரம்பி உள்ளது.இந்நிலையில், நேற்று பெய்த கனமழையால், நீர்த்தேக்கத்தில் இருந்து, 4,500 கன அடி உபரி நீர் வெளியேற்றப்பட்டது.

### நெடுமானூரில் விவசாய திருவிழா

சங்கராபுரம்: சங்கராபுரம் அடுத்த நெடுமானூரில் விவசாய திருவிழா நடந்தது.விழாவிற்கு ஜனனி மகாலிங்கம் தலைமை தாங்கினார். பாக்ட் உர நிறுவன தர கட்டுபாடு அலுவலர் ராமசாமி, உ தவி வேளாண்மை அலுவலர் விஜயகுமார் முன்னிலை வகித்தனர். பாக்ட் உர நிறுவன துணை பொதுமேலாளர் முரளிகிருஷ்ணன் வரவேற்றார். உர நிறுவன பொது மேலாளர்

இந்திரா, விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குனர் ரத்தினசாபாபதி, பிராந்திய மேலாளர் சுப்ரமணியன் ஆகியோர் பேசினர். சிறந்த விவசாயிகளுக்கு, இயற்கை உரம் பரிசாக வழங்கப்பட்டது. மேலும், 50 விவசாயிகளுக்கு விவசாய கருவிகள் வழங்கப்பட்டது. ஊராட்சி மன்ற தலைவர் ராஜேந்திரன், கவுன்சிலர் பாக்யம் நாகராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர். பாக்ட் உர விற்பனை அலுவலர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

**வானூர் பகுதியில் மரவள்ளி செடிகள் சேதம்**

வானூர்: வானூர் பகுதியில் மரவள்ளி செடிகள் சாய்ந்து சேதமடைந்தன.வானூர் அடுத்த வினாயகபுரம் கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில், மரவள்ளி செடிகள் பயி ரிட்டுள்ளனர். அறுவடை செய்ய வேண்டிய தருனத்தில், கடந்த சில தினங்களுக்கு முன், வானூர் பகுதியில் பலத்த மழையுடன் சூறைகாற்று வீசியதால், மரவள்ளி செடிகள் வேரோடு சாய்ந்தன. மரவள்ளி கிழங்குகள், மழை தண்ணீரில் அழுகியுள்ளன. வானூரில் தொடர்ந்து மழை பெய்ததாலும், மரவள்ளி கிழங்குகளை வாங்க வியாபாரிகள் ஆர்வம் காட்டாததால், வினாயகபுரம் விவசாயிகளுக்கு, பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.வேளாண் துறை அதிகாரிகள், பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு, நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பலத்த மழை பெய்தும் வறண்டு காணப்படும் இடும்பன் குளம்**

ப.வேலூர்: பலத்த மழை பெய்தும், இடும்பன் குளம் வறண்டு கிடப்பதால், விவசாயிகளும், பொதுமக்களும் ஏமாற்றமடைந்தனர்.

பரமத்தி வேலூர் வட்டம், மரவாபாளையம் அருகே, 400க்கும் மேற்பட்ட ஏக்கரில் இடும்பன் குளம் உள்ளது. இந்த குளம் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் தொடர் மழை பெய்யும் காலங்களில், திருமணி முத்தாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நிரம்பி வழிந்தோடுவது வழக்கம். கடந்த சில நாட்களாக தமிழகம் முழுவதும் பலத்தை மழை பெய்து வருகிறது. சேலம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகளில் பெய்த கன மழையால் திருமணி

முத்தாற்றில் மழைநீரின் வரத்து அதிகரித்துள்ளது. மழைநீர் பரமத்தி அருகே உள்ள பில்லூர் படுகையணையை வந்தடைந்தது. கடந்த, 5 ஆண்டுகளாக சரியான மழை இல்லாததால் படுகையணை நிரம்பியது. இதனால், பில்லூர், கூடச்சேரி, மாவுரொட்டி மற்றும் பரமத்தி சுற்றியுள்ள பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர். இந்த மழை நீர் பரமத்தி மரவாபாளையம் அருகே உள்ள இடும்பன் குளத்துக்கு திருமணி முத்தாறு வழியாக வரும் என விவசாயிகளும், பொதுமக்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், இடும்பன் குளத்துக்கு மழைநீர் வரும் கால்வாய் தூர்வாராமலும், சீமைக் கருவேல மரங்களின் ஆக்கிரமித்துள்ளதாலும் நீர்வரத்தின்றி வறண்டு கிடக்கிறது. சீமைக் கருவேல மரங்களை அகற்றினால் மட்டுமே மழைநீர் தடையின்றி இடும்பன் குளத்தை வந்தடையும்.

## மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாயில் 14 நாட்களுக்கு பின் நீர் திறப்பு

மேட்டூர்: மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாயில் இருந்து, 14 நாட்களுக்கு பின், பாசனத்துக்கு நீர்திறக்கப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து கிழக்கு, மேற்கு கால்வாயில் ஆக.,20ம் தேதி பாசனத்துக்கு நீர்திறக்கப்பட்டது. இதனால், சேலம், ஈரோடு, நாமக்கல் மாவட்டத்தில், 45 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் பயிர் சாகுபடி செய்தனர். வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்தால், வினாடிக்கு, 400 கனஅடியாக இருந்த கால்வாய் நீர்திறப்பு கடந்த, 5ம் தேதி நிறுத்தப்பட்டது. பருவமழை தீவிரம் குறைந்து பள்ளிபாளையம், ஜம்பை உள்ளிட்ட கடைமடை பாசன பகுதியில் வறட்சி நீடிக்கிறது. இதனால், 14 நாட்களுக்கு பின், மேட்டூர் அணையில் இருந்து கிழக்கு, மேற்கு கால்வாயில் வினாடிக்கு, 400 கனஅடி நீர்திறக்கப்பட்டது.

## படேதலாவ் ஏரி கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற விவசாயிகள் கோரிக்கை

கிருஷ்ணகிரி: 'படேதலாவ் ஏரி கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்' என, லோக்சபா துணை சபாநாயகர் தம்பிதுரையிடம் விவசாய பயனாளிகள் குழுவினர் கோரிக்கை மனு அளித்தனர்.

கிருஷ்ணகிரிக்கு லோக்சபா துணை சபாநாயகர் தம்பிதுரை வந்தார். படேதலாவ் கால்வாய் திட்ட விவசாய பயனாளிகள் குழு ஒருங்கிணைப்பாளர் விஜயகுமார் தலைமையில் தலைவர் கர்ணல் திருப்பதி மற்றும் நிர்வாகிகள் அவரை சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை கொடுத்தனர்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது: படேதலாவ் கால்வாய் திட்டம், அ.தி.மு.க., ஆட்சியில் துவங்கப்பட்டது. தற்போது அந்த திட்டம் செயல்படுத்தப்படாமல் உள்ளது. இதனால் கடந்த, 15 ஆண்டுகளாக, வேப்பனப்பள்ளி, கிருஷ்ணகிரி, பர்கூர், மத்தூர் மற்றும் ஊத்தங்கரை ஆகிய யூனியன்களில் உள்ள, 113 ஏரிகள், நீரின்றி வறண்டு போய் உள்ளது. ஏரிகள் வறண்டதால், சம்பந்தப்பட்ட பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் மிகுந்த இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். கடந்த தேர்தலின் போது, தேர்தல் வாக்குறுதியாக கூறப்பட்ட இந்த திட்டம் தற்போது வரை செயல்படுத்தாமல் உள்ளது. எனவே, இந்த திட்டத்தை நிறைவேற்ற போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

## நஷ்டயீடு கேட்கும் வெற்றிலை விவசாயிகள்

\கரூர்: கரூர் மாவட்டம், லாலாப்பேட்டை பகுதியில், 200 ஏக்கரில் வெற்றிலை சாகுபடி நடந்து வருகிறது. இரவு நேரத்தில், பன்றிகள் கூட்டம், கூட்டமாக வந்து, வெற்றிலை கொடிக்கால் தோட்டங்களுக்குள் புகுந்து நாசம் செய்து வருகிறது. இதனால், விவசாயிகள் இழப்பை சந்தித்து வருகின்றனர். இதுதொடர்பாக பன்றி வளர்ப்பவர்களிடம் கூறியும் பயனில்லை. மேலும் ஊராட்சி நிர்வாகத்திடம் தெரிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்தும் பன்றிகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டயீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைக்கின்றனர்.

## சீமைக்கருவேல மரங்களை அகற்ற வேண்டுகோள்

கரூர்: கரூர் மாவட்டம், க. பரமத்தி ஒன்றியம், பவித்திரம் ஊராட்சியில் உள்ள பெரிய தாதம்பாளையம் ஏரி, 300 ஏக்கர் பரப்பளவு கொண்டது. ஏரியை தற்போது சீமைக்கருவேல மரங்கள் ஆக்கிரமித்துள்ளன. நீரை அதிகளவில் உறிஞ்சும் கருவேல மரங்களினால் சின்ன தாதம்பாளையம், கணபதிபாளையம், கொத்தம்பாளையம், பல்லமருதப்பட்டி, மலச்சிப்புதூர், கிலுவம்பாளையம், குளத்துப்பட்டி உள்ளிட்ட பகுதிகள் வறண்ட பாலைவனமாக மாறும் நிலை உள்ளது. இதுகுறித்து எம்.பி. எம்.எல்.ஏ.,க்களிடம் உள்ளிட்ட அனைவரிடமும் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சீமைக்கருவேல மரங்களை உடனே அகற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தென்னை மரங்களில் வேர்கரையான் நோய் தாக்கம்? கட்டுப்படுத்த கோரிக்கை

கரூர்: கரூர் பகுதியில், தென்னை மரங்களில் இலை கருகி வருவதால், தென்னை மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் காவிரி, அமராவதி ஆகிய இரு ஆறுகள் மூலம், 40 ஆயிரம் ஏக்கர் வரை பாசன வசதி உள்ளது. இப்பகுதியில், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன, கரூர் அடுத்த, சணப்பிரட்டி பகுதியில் உள்ள தென்னை தோப்பில், தென்னை இலைகள் கருகிய நிலையில் உள்ளது. தென்னையில் நோய் தாக்கம் காரணமாக மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்க செயல் தலைவர் ராஜாராம் கூறியதாவது: தென்னையில் வேர்கரையான் நோய் தாக்கினால், இலை கருகும். கார அமில மண்ணில் தென்னையின் வேர் சென்றாலும் கருகி விட வாய்ப்புள்ளது. விவசாய நிலங்களில் வெங்கக்கல், சுக்காங்கல் போன்றவை அதிகளவில் இருந்தாலும் இலை கருகி விடும். நோய் பரவுவதை வேளாண்மை துறை மண் பரிசோதனை மூலம் கண்டறிந்து, நோய் கட்டுப்படுத்துவற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

வேளாண்மைத்துறை இணை இயக்குனர் மதனகோபால் கூறியதாவது: கரூர் மாவட்டத்தில், 2,000 ஹெக்டரில் தென்னை மரங்கள் வளர்க்கப்படுகிறது. கரூர் மாவட்டத்தில் இலை கருகல் நோய் பாதிப்பு கிடையாது. கெமிக்கல் தண்ணீர் விவசாய நிலங்களில் பாய்ச்சி இருந்ததால் இலை கருகி இருக்கலாம். சத்து குறைபாடு காரணமாக இலை கருகி காணப்படும். பூச்சியினால் இலை கருகல் நோய் பாதிக்க வாய்ப்பில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**கரூரில் மழை**

கரூர்: கரூரில், நேற்று மாலை மழை பெய்ததால், மக்கள் மழையில் நனைந்தபடி சென்றனர். கரூரில், நேற்று காலை முதல் வெயில் சுட்டெரித்தது. மாலையில், வானம் மேகமூட்டமாக காட்சியளித்தது. மாலை, 6.25 முதல் இரவு, 7 மணி வரை மழை பெய்தது. டெக்ஸ் மற்றும் கொசுவலை தயாரிப்பு பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள் பல்வேறு வர்த்தக நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்ல பஸ் ஸ்டாண்டு நோக்கி வந்தனர். மழை திடீரென பெய்ததால், பெண்கள், முதியவர்கள் மழையில் நனைந்தபடி சென்றனர்.

**மலைக்காய்கறிகள் விலை உயர்வு**

தாண்டிக்குடி,:கார்த்திகை மாத துவக்கம் எதிரொலியாக மலைக்காய்கறிகள் விலையுயர்ந்துள்ளது.கடந்த சில வாரங்களாக பட்டர் பீன்ஸ், முருங்கை பீன்ஸ், சவ்சவ் விலை குறைவாக விற்ற நிலையில் விவசாயிகள் பாதித்தனர். தொடர் மழை மற்றும் கார்த்திகை மாதம் துவங்கிய நிலையில் ரூ.15 க்கு விற்ற முருங்கை பீன்ஸ் ரூ.40 க்கும், ரூபாய் 40 க்கு விற்ற பட்டர் பீன்ஸ் ரூ.70 க்கும், ரூபாய் ஏழுக்கு விற்ற சவ்சவ் ரூ.12 க்கும் விற்கிறது. தாண்டிக்குடி விவசாயி செல்வம் கூறியதாவது: கார்த்திகை மாதத்தில் பக்தர்களால் காய்கறி தேவை அதிகரிப்பு, வட மாவட்டங்களில் வெளுத்து வாங்கிய மழை போன்றவற்றால் மலைக்காய்கறிகள் விலை உயர்ந்துள்ளது. துவக்கத்தில் தொடர் மழையால் பாதித்த விவசாயிகளுக்கு தற்போதைய விலை உயர்வு ஆறுதலை அளித்துள்ளது, என்றார்.

**விவசாய கண்காட்சி**

பழநி,:மதுரை விவசாயக்கல்லூரி மாணவர்கள் கிராமத்தங்கல் திட்டத்தின் கீழ் பழநி அருகே கோரிக்கடவு ஊராட்சியில் விவசாயக் கண்காட்சி நடந்தது. கோரிக்கடவு ஊராட்சியில் நடந்த மக்கள் தொடர்பு முகாமில் வேளாண் கண்காட்சி இடம்பெற்றது. அதில் மதுரை விவசாய கல்லூரி மாணவர்கள் சார்பில் ஒருங்கிணைந்த பண்ணையம், திருந்திய நெல்சாகுபடி, வேளாண் தொழில் நுட்பங்கள் உள்ளிட்டவை கண்காட்சியில் இடம்பெற்றது. வேளாண் அலுவலர் பூரணி மற்றும் மாணவர்கள் பாலகுமார், கார்த்திக், நீலமணிகண்டன், செந்தில்குமார், விக்னேஷ்குமார், ஹர் ஷித்குமார் செய்முறை விளக்கம் அளித்தனர்.

## இயந்திர நெல் நடவு: அதிகரிக்கும் மகசூல்

வடமதுரை,:வடமதுரை வட்டாரம் முத்தனாங்கோட்டையில் நெல் சாகுபடி குறித்த பண்ணைப் பள்ளி வகுப்பு நடந்தது. இணை இயக்குனர் சம்பத்குமார் துவக்கி வைத்தார். தொழில்நுட்ப மேலாண்மை திட்ட வேளாண்மை அலுவலர் பாண்டியராஜன், உதவி இயக்குனர் ராணி பங்கேற்றனர். மேட்டுப்பாத்தி முறையில் அமைக்கப்பட்ட 18 முதல் 20 நாள் நெல் நாற்றுக்களை நடவு இயந்திரம் மூலம் சீரான இடைவெளியில் ஒரு மணி நேரத்தில் ஒரு ஏக்கர் நடப்பட்டது. <உதவி இயக்குனர் கூறுகையில், ""இயந்திர நடவு முறையில் பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுகிறது. போதிய இடைவெளி இருப்பதால், சூரிய வெளிச்சம், காற் றோட்டம் கிடைப்பதால் அதிக சிம்புகளும், பக்க சிம்புகளும் வெடித்து மகசூல் அதிகரிக்கும். நடவு பணி செலவினம் குறைகிறது. எக்டேருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. இயந்திர நடவு செய்ய விரும்புவோர் வடமதுரை வட்டார வேளாண்மை விரிவாக்க அலுவலகத்தை நேரில் அணுகலாம்" என்றார்.

## மரக்கன்று நடுவிழா

ஆண்டிபட்டி, :கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு ஆண்டிபட்டி தொடக்க விவசாய கூட்டுறவு வங்கியில் மரக்கன்று நடும் விழா நடந்தது. விழாவிற்கு

வங்கி தலைவர் பாலசந்திரன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் பாலமுருகன் முன்னிலை வகித்தார். வங்கி வளாகத்தில் பல வகை மரக்கன்றுகள் நடப்பட்டன. வங்கி இயக்குனர்கள் சக்திவேல், துரைராஜ், செல்வராஜ், உமாசங்கர், தமிழரசி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சண்முகாநதி அணையில் 95 மி.மீ., மழை பெரியாறு அணையிலும் தொடருது

கூடலூர்: சண்முகாநதி அணையில் நேற்று அதிகபட்சமாக 95 மி.மீ., மழை பதிவானது. பெரியாறு அணையிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கூடலூர் அருகே உள்ள சண்முகாநதி அணையில் நேற்று முன்தினம் அதிக பட்சமாக 95 மி.மீ., மழை பதிவானது. மாவட்டத்தில் பெய்த கன மழையால், வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, நேற்று காலை நிலவரப்படி வினாடிக்கு நீர் வரத்து 2327 கன அடியாக இருந்தது. இதனால் அணையின் நீர்மட்டமும் வெகுவாக உயர்ந்து வருகிறது. பெரியாறு அணை நீர்பிடிப்பில் பெய்த மழையால், அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1870 கன அடியாக இருந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் நேற்று மாலை நிலவரப்படி 132 அடியாக உயர்ந்தது. தமிழகப்பகுதிக்கு 511 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர்பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் 136 அடியை எட்டி விடும் நிலை உள்ளது. மழையளவு (மி.மீ.,) வருமாறு: பெரியாறு 18.4, தேக்கடி 14.4, கூடலூர் 85, சண்முகாநதி 95, உத்தமபாளையம் 90.6, வீரபாண்டி 6, மஞ்சளாறு 45ல, சோத்துப்பாறை 24, மருதாநதி 13.8, கொடைக்கானல் 23.

### பருவ மழைக்கு நோய் பரவுவதை தடுக்க காய்ச்சிய குடிநீர் பருகவும்:கலெக்டர் தகவல்

சிவகங்கை:""பருவ மழைக்கு நோய் பரவாமல் தடுக்க, தண்ணீரை காய்ச்சி வடிகட்டி குடிக்க வேண்டும்," என கலெக்டர் மலர்விழி தெரிவித்தார். அவர் கூறியதாவது:

வடகிழக்கு பருவ மழைக்கு பொதுமக்களுக்கு வயிற்று போக்கு, மஞ்சள் காமாலை, டைபாய்டு, வைரஸ் காய்ச்சல் ஏற்பட வாய்ப்பு உண்டு.இவை வராமல் தடுக்க குடிநீரை நன்கு காய்ச்சி வடிகட்டிய பின் குடிக்க வேண்டும். தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்களை மூடி வைக்கவும். தண்ணீர் தொட்டிகளை வாரம் ஒரு முறை தேங்காய் நார், பிரஷ் கொண்டு நன்கு தேய்த்து சுத்தம் செய்து, காய வைத்த பின் மீண்டும் தண்ணீர் நிரப்ப வேண்டும்.

தற்போது மழை பெய்து வருவதால், வீடுகளை சுற்றியுள்ள தேவையற்ற பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடி பாட்டில்கள், டயர், ஆட்டு உரல், தேங்காய் சிரட்டை, பிளாஸ்டிக் கப் போன்றவற்றை அப்புறப்படுத்துவதின் மூலம், கொசு உற்பத்தியாவது தடுக்கப்படும். இதன் மூலம் டெங்கு, சிக்குன்குனியா போன்ற காய்ச்சல் வராமல் தடுக்கலாம்.

காய்ச்சல் கண்டவர்கள் அருகே உள்ள அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சென்று சிகிச்சை பெறலாம், என்றார்.

### முன்னெச்சரிக்கை நடவடிக்கை தயார்: பிளவக்கல்லில் 131 மி.மீ., மழை

விருதுநகர்: மாவட்டத்தில் மழையால் ஏற்படும் சேதத்தை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:வருவாய் , வளர்ச்சி , காவல் , தீயணைப்பு , மின் , பொதுப்பணித்துறை அலுவலர்களடங்கிய பல்வேறு மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை அலுவலர்கள் நீர்நிலைகளை கண்காணிக்கவும், சேதம் ஏற்படாமல் தவிர்க்க முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏரி,குளம் , ஆறுகளில் உடைப்பு ஏற்படுவதை தவிர்க்க அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், மணல் மூடைகள், மருத்துவமனைகளில் மருத்துவர்கள்,

மருந்துகள் போன்றவற்றை வைத்திருக்கவும், மழை வெள்ளத்தினால் தேங்கும் தண்ணீரை அகற்றுவதற்கு தேவையான இயந்திரம் கையிருப்பில் வைத்து கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைக்க தேவையான இடங்கள், உணவு, நீர், அத்தியாவசிய பொருட்கள், தயார் நிலையில் உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களை மீட்க தீயணைப்பு படை மூலம் ரப்பர் படகுகள், மின் வயர்கள் பாதுகாப்பாக உள்ளதா என கண்கணிக்கவும், தொற்று நோய்கள் ஏற்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது,என்றார். மழை சேதங்கள் பற்றி தகவல் தெரிவிக்க இலவச தொலை பேசி எண் 1077 .

**தூத்துக்குடி மீன் வளக்கல்லூரிக்கு கென்ட் பல்கலை குழு வருகை**

தூத்துக்குடி: தூத்துக்குடி மீன் வளக்கல்லூரிக்கு, பெல்ஜியம் நாட்டின் கென்ட் பல்கலை குழு விஞ்ஞானிகள் வருகை தந்தனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பெல்ஜியம் நாட்டின் கென்ட் பல்கலையில் இருந்து விஞ்ஞானிகள் பீட்டர்போசியர், கார்த்திக் பருவா, தலைமையில் <உயர்மட்டக் குழு தூத்துக்குடி மீன் வளக்கல்லூரிக்கு வருகை தந்தது. அவர்களை மீன் வளப் பல்கலை துணை வேந்தர் பாஸ்கரன் மணிமாறன், முதல்வர் சுகுமார், ஆராய்ச்சி இயக்குனர் ஜெயசேகரன் ஆகியோர் வரவேற்றனர். தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ள இறால்பண்ணை,மீன் பதப்படுத்தும் ஆலைகளுக்கு சென்று பார்வையிட்டனர். சகாயமாதா சால்ட்னர்ஸ் பி.லிட்., நிறுவனத்தில் ஆர்டீமியா வளர்ப்பு குறித்து கலந்துரையாடினர்.

பின் மீன் வளக்கல்லூரி பல்வேறு துறை பேராசிரியர்கள் தங்களது ஆய்வு குறித்து விளக்கினர். கென்ட் பல்கலை குழு சார்பில் தங்களது ஆய்வுகள் குறித்து விளக்கினர். இரு தரப்பும் கூட்டாக செயல்பட விருப்பம் தெரிவித்தனர். மீன் வளக்கல்லூரி முதல்வர் சுகுமார் தெரிவித்ததாவது: மீன் வளக் கல்லூரியும், கென்ட் பல்கலையும் இணைந்து செயல்பட புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கென்ட் பல்கலை விஞ்ஞானிகள் குழுவும் விருப்பம் தெரிவித்துள்ளனர், என அவர் தெரிவித்தார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பூண்டி ஏரியிலிருந்து 8 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றம்**

பூண்டி ஏரியிலிருந்து வியாழக்கிழமை மாலை முதல் 8 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரமான பூண்டி ஏரி கடந்த இரண்டு ஆண்டுகளாக நீரின்றி வறண்டு இருந்தது. கடந்த 8-ஆம் தேதி வரை மொத்தமுள்ள 323 கோடி கன அடி கொள்ளளவு கொண்ட ஏரியில் 7 கோடி கன அடி நீர் மட்டுமே இருந்தது.

வட கிழக்குப் பருவ மழை காரணமாக, 16-ஆம் தேதி ஏரி மொத்த கொள்ளவை எட்டியது. இதையடுத்து, அன்று பிற்பகலில் விநாடிக்கு 2 ஆயிரம் கன அடி வீதம் ஆரணி ஆற்றில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

பலத்த மழை காரணமாக பூண்டி ஏரிக்கு 16-ஆம் தேதி இரவு நிலவரப்படி நீர் வரத்து 16 ஆயிரம் கன அடி ஆக இருந்தது. இதனால், விநாடிக்கு 20 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்பட்டது.

பின்னர், 17-ஆம் தேதி இரவு மழை குறைந்ததால் நீர்வரத்து 2 ஆயிரம் கன அடியாக குறைந்தது. பின்னர், உபரி நீர் வெளியேற்றம் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், வியாழக்கிழமை பிற்பகல் முதல் திருவள்ளூரில் பலத்த மழை பெய்தது. இதனால், மாலை 5 மணி அளவில் ஏரிக்கு சுமார் 16 ஆயிரம் கன அடி நீர் வரத்தொடங்கியது. இதையடுத்து, 8 ஆயிரம் கன அடிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. ஏரிக்கு நீர் வரத்து குறைந்தால், உபரி நீர் வெளியேற்றம் நிறுத்தப்படும். வியாழக்கிழமை மாலை நிலவரப்படி, ஏரியில் நீர் இருப்பு 275 கோடி மில்லியன் கன அடியாக உள்ளது.

## மிளகு வர்த்தகம் தொடர்பான சர்வதேச மாநாடு: 22-இல் மைசூரில் தொடக்கம்

மிளகு வர்த்தகம் தொடர்பான 43-ஆவது சர்வதேச மாநாடு மைசூரில் வரும் நவ. 22-ஆம் தேதி தொடங்கவிருக்கிறது. இந்திய வாசனைப் பொருள்கள் வாரியத்தின் தலைவரான ஏ.ஜெயதிலக் இதனைத் தெரிவித்தார். கொச்சியில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை அவர் தெரிவித்ததாவது:

மிளகு வேளாண், வர்த்தகம் தொடர்பான மாநாட்டை சர்வதேச மிளகு அமைப்பு ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

இவ்வாண்டு சர்வதேச மிளகு அமைப்பின் வருடாந்தர மாநாடு, மைசூரில் நடைபெறவுள்ளது. நவ. 22-ஆம் தேதி தொடங்கவுள்ள 4 நாள் மாநாட்டில், மிளகு ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள நாடுகளைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். இந்த மாநாட்டில், மிளகு உற்பத்தியை அதிகரித்தல், தரம் மேம்பாடு, புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துதல், சர்வதேச வர்த்தக சட்ட நுணுக்கங்கள் ஆகியவை குறித்து தனித்தனி அமர்வுகள் நடைபெறும்.

சர்வதேச மிளகு அமைப்பில் இந்தியாவைத் தவிர, பிரேசில், இந்தோனேசியா, மலேசியா, இலங்கை, வியத்நாம் ஆகிய நாடுகள் முழு அளவிலான உறுப்பு நாடுகளாக உள்ளன. பப்புவா நியூகினீ துணை உறுப்பு நாடாக உள்ளது. சீனா, கம்போடியா, மடகாஸ்கர் ஆகிய நாடுகள் விரைவில் இந்த அமைப்பில் உறுப்பு நாடுகளாக இணையவுள்ளன என்றார் அவர்.

1972-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் சர்வதேச மிளகு அமைப்பின் தலைமையகம், இந்தோனேசியா தலைநகர் ஜகர்தாவில் உள்ளது. அந்த அமைப்பின் தற்போதைய தலைவராகப் பொறுப்பு வகித்து வருபவர், இந்திய வாசனைப் பொருள்கள் வாரியத்தின் தலைவரான ஏ.ஜெயதிலக்.

## "பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும்'

கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள ரூ. 2 லட்சம் வரையிலான பயிர்க் கடனை மாநில அரசு உடனடியாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று,

கர்நாடக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஜெகதீஷ் ஷெட்டர் வலியுறுத்தினார்.

கர்நாடகத்தில் நிலவும் வறட்சி குறித்து சட்டப்பேரவையில் வியாழக்கிழமை அவர் பேசியது:

கர்நாடகத்தில் 136 வட்டங்களில் வறட்சி நிலவுவதாக மாநில அரசு அறிவித்துள்ளது. ஆனால், வறட்சி பாதித்த பகுதிகளில் உரிய நிவாரணப் பணிகள் நடைபெறவில்லை. ராஜஸ்தான் மாநிலத்துக்குப் பிறகு வறண்ட மாநிலமான கர்நாடகத்தில் அடிக்கடி வறட்சி ஏற்படுகிறது. இதைச் சமாளிக்க நிரந்தரமான செயல் திட்டம் எதுவும் நம்மிடம் இல்லை என்பது வேதனை அளிக்கிறது. வறட்சி நிவாரண நிதியை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் மாநில அரசு தோல்வி அடைந்துள்ளது.

விவசாயிகள் தொடர்ந்து தற்கொலை செய்து கொண்டாலும், அதைத் தடுக்க மாநில அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வது குறித்து முதல்வர் சித்தராமையா, அமைச்சர்கள் யாரும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தவில்லை.

இரண்டரை ஆண்டு கால சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்கவும், வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், கால்நடைகளுக்கு தீவனங்களைச் சேகரிப்பதிலும், குடிநீர் வசதியை எற்படுத்துவதிலும், கால்நடைப் பராமரிப்பு மையங்களைத் திறப்பதிலும், மாநில அரசு முழுமையாகத் தோல்வி அடைந்துள்ளது.

மாநிலம் முழுவதும் கடந்த ஏப்ரல் முதல் இதுவரை 840 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அவர்களில் 742 பேரின் குடும்பங்களுக்கு மட்டுமே அரசு இழப்பீட்டுத் தொகை வழங்கியுள்ளது. மாநில அரசின் செயல்பாட்டின்மையால் கர்நாடகம் வளர்ச்சியில் 10 ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு ரூ.1,540 கோடி வழங்கியுள்ளது. ஆனால், இந்த நிதியை அரசு செலவிடவில்லை.

விவசாயிகளின் பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும். விவசாயிகளின் தற்கொலைகளைத தடுக்க கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள்

பெற்றுள்ள ரூ.2 லட்சம் வரையிலான பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்யவேண்டும். அப்போதுதான், விவசாயிகள் தற்கொலை தடுக்கப்படும் என்றார்.

**தொடர் மழையால் வெங்காடு பகுதியில் 250 ஏக்கர் பயிர்கள் நாசம்**



தொடர் மழை காரணமாக வெங்காடு பெரிய ஏரியில் இருந்து வெளியேறும் உபரிநீரால் அப்பகுதியில் 250 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் நீரில் மூழ்கின.

ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம் வெங்காடு கிராமத்தில் சுமார் 375 ஏக்கர் பரப்பிலான விவசாய நிலம் உள்ளது. இங்கு தற்போது சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இப்பகுதி விவசாயிகள் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் பாபட்லா ரக நெல் பயிரிட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் தொடர் மழையால் வெங்காடு பகுதியில் உள்ள பெரிய ஏரி நிரம்பி அதிகளவிலான உபரிநீர் வெளியேறி வருகிறது. இதனால் சுமார் 150 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள நெற் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அதேபோல் வெங்காடு ஊராட்சிக்கு உள்பட்ட இரும்பேடு ஏரி நிரம்பி நீர்பிடிப்புப் பகுதி அதிகரித்துள்ளதாலும், வெங்காடு பெரிய ஏரியில் இருந்து

வெளியேறும் உபரிநீர் செம்பரம்பாக்கம் ஏரிக்குச் செல்லும் கால்வாயில் மூன்று இடங்களில் உடைப்பு ஏற்பட்டதாலும் இரும்பேடு ஏரி அருகே பயிரிடப்பட்டுள்ள சுமார் 100 ஏக்கர் பரப்பிலான வயல்வெளியில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் நெற் பயிர்கள் அழுகத் தொடங்கியுள்ளன. இதன் காரணமாக விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ள இப்பகுதி மக்கள் சோகத்தில் உள்ளனர். மேலும் தங்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். குடியிருப்புப் பகுதியில் தண்ணீர் தேக்கம்: தொடர் மழையால் ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம் கொளத்தூர் ஊராட்சிக்கு உள்பட்ட வெள்ளரை பகுதியில் உள்ள காலனி குட்டை நிரம்பியுள்ளதால், குட்டையில் இருந்து வெளியேறும் உபரிநீர் அருகில் உள்ள குடியிருப்புப் பகுதிக்குள் தேங்கி நிற்கிறது. இதனால் வெள்ளரை பகுதியில் சுமார் 50 குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட அனைவரும் ஊராட்சி நிர்வாகம் சார்பில் அங்குள்ள அரசுப் பள்ளிக் கட்டடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளரை காலனி குட்டையில் தேங்கியுள்ள மழைநீரை மோட்டார்கள் மூலம் அகற்றும் பணியில் ஊராட்சி நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நவம்பர் 20-ஆம் தேதி நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் இரா.கஜலட்சுமி வெளியிட்ட அறிக்கை:

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நவம்பர் 20-ஆம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம் நிர்வாகக் காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டம் குறித்த அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெள்ளச் சேதம்: விவசாயத் துறை கணக்கெடுப்பு**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விவசாயத் துறையினர் கணக்கெடுத்துள்ளனர்.

அவர்கள் கணக்கின்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 466 கிராமங்களில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதில் 8,159 ஹெக்டேரில் நெல் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. 3,500 ஹெக்டேர் நெல் பயிர்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளன.

இதேபோல் கரும்பு 350 ஹெக்டரிலும், சிறுதானியங்கள் 2 ஹெக்டேரிலும், நிலக்கடலை 10 ஹெக்டேரிலும் சேதம் அடைந்துள்ளன.

வெள்ளச் சேதத்தை கணக்கெடுக்க அமைக்கப்பட்ட குழுவினர் இந்தச் சேதம் குறித்த அறிக்கையை தாக்கல் செய்துள்ளனர்.

**திருவள்ளூர், திருத்தணியில் மீண்டும் மழை**

திருவள்ளூரில், வியாழக்கிழமை பலத்த மழை பெய்தது. இதனால், சாலைகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது.

திருவள்ளூரில், கடந்த 10-ஆம் தேதி முதல் தொடர்ந்து மழை பெய்தது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், புதன்கிழமை வானம் தெளிவானதால் மழை நின்றது. வியாழக்கிழமை மதியம், திடீரென கருமேகம் சூழ்ந்து பலத்த மழை பெய்தது. இதனால், மாவட்டத்தின் பல பகுதிகளில் மின்சாரம் தடைபட்டது.

மாலை நிலவரப்படி, மாவட்டத்தில் மழை அளவு (மில்லி மீட்டரில்): ஊத்துக்கோட்டை - 17, பள்ளிப்பட்டு - 14, திருத்தணி - 32, திருவள்ளூர் - 17, பூந்தமல்லி - 21, அம்பத்தூர் - 2, பூண்டி - 40, செம்பரம்பாக்கம் - 3, தாமரைப்பாக்கம் - 13 மில்லி மீட்டர் மழை அளவு பதிவாகியுள்ளது.

திருத்தணியில்...

திருத்தணியில், வியாழக்கிழமை கன மழை பெய்தது.

வடகிழக்குப் பருவமழை காரணமாக திருத்தணியில் 10 நாள்களுக்கு தொடர் மழை நீடித்தது. மழை காரணமாக, நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. நீர் நிலைகள் நிரம்பியதால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது.

கடந்த இரு நாள்களாக மழை ஓய்ந்திருந்த நிலையில், திருத்தணியில், வியாழக்கிழமை மீண்டும் மழை

பெய்தது.

இதனால், நகரின் பல பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

நிவாரண உதவி வழங்கல்: இதனிடையே, திருத்தணி, பள்ளிப்பட்டு பகுதிகளில் வீடுகளை இழந்தோருக்கு தமிழக அரசின் வெள்ள நிவாரண உதவியாக தலா ரூ. 4,100 வீதம் வழங்கப்பட்டது.

**திருவள்ளூர், திருத்தணியில் மீண்டும் மழை**

திருவள்ளூரில், வியாழக்கிழமை பலத்த மழை பெய்தது. இதனால், சாலைகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது.

திருவள்ளூரில், கடந்த 10-ஆம் தேதி முதல் தொடர்ந்து மழை பெய்தது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், புதன்கிழமை வானம் தெளிவானதால் மழை நின்றது. வியாழக்கிழமை மதியம், திடீரென கருமேகம் சூழ்ந்து பலத்த மழை பெய்தது. இதனால், மாவட்டத்தின் பல பகுதிகளில் மின்சாரம் தடைபட்டது.

மாலை நிலவரப்படி, மாவட்டத்தில் மழை அளவு (மில்லி மீட்டரில்): ஊத்துக்கோட்டை - 17, பள்ளிப்பட்டு - 14, திருத்தணி - 32, திருவள்ளூர் - 17, பூந்தமல்லி - 21, அம்பத்தூர் - 2, பூண்டி - 40, செம்பரம்பாக்கம் - 3, தாமரைப்பாக்கம் - 13 மில்லி மீட்டர் மழை அளவு பதிவாகியுள்ளது.

திருத்தணியில்...

திருத்தணியில், வியாழக்கிழமை கன மழை பெய்தது.

வடகிழக்குப் பருவமழை காரணமாக திருத்தணியில் 10 நாள்களுக்கு தொடர் மழை நீடித்தது. மழை காரணமாக, நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. நீர் நிலைகள் நிரம்பியதால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது.

கடந்த இரு நாள்களாக மழை ஓய்ந்திருந்த நிலையில், திருத்தணியில், வியாழக்கிழமை மீண்டும் மழை
பெய்தது.

இதனால், நகரின் பல பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

நிவாரண உதவி வழங்கல்: இதனிடையே, திருத்தணி, பள்ளிப்பட்டு பகுதிகளில் வீடுகளை இழந்தோருக்கு தமிழக அரசின் வெள்ள நிவாரண உதவியாக தலா ரூ. 4,100 வீதம் வழங்கப்பட்டது.

**நத்தம் பகுதியில் செவ்வந்தி பூ விலை குறைவு**

நத்தம் பகுதியில் விளைவிக்கப்படும் செவ்வந்தி பூக்களின் விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

நத்தம் சுற்றுவட்டார பகுதிகளான மணக்காட்டூர், சிரங்காட்டுப்பட்டி, செந்துறை, பிள்ளையார்நத்தம் உள்ளிட்ட பல கிராமங்களில் தோட்டப் பயிர்களாகவும், இறவை சாகுபடியாகவும், மானாவாரியாகவும் செவ்வந்தி பூக்களை விவசாயிகள் பயிரிட்டு உள்ளனர். தற்போது மழையினால் அதிக அளவு பூக்கள் பூத்துக்குலுங்குகிறது. இந்தப் பூக்களை விவசாயிகள் அறுவடை செய்து விற்பனை செய்து வருகின்றனர். கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.60 முதல் 90 வரை விலைபோனது. இந்த நிலையில் பூக்களின் வரத்து அதிகரித்ததால் கிலோ ரூ.30 முதல் 40 வரை விலைபோகிறது. உற்பத்தி செலவைக் காட்டிலும் வருவாய் குறைந்து காணப்படுகிறது. இதனால் பூ விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கார்த்திகை மாதத்தையொட்டி பூக்களின் விலை உயரும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**ஆறுகளில் நீர் வரத்து அதிகரிப்பு: தாழ்வான பகுதிகள் கண்காணிப்பு**

தேனி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் ஆறுகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளதையடுத்து தாழ்வான பகுதிகளில் வெள்ள பாதிப்பு ஏற்படுவதை தடுக்க அனைத்து அரசு துறைகள் சார்பில் ஒருங்கிணைந்த கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் மழையால் முல்லைப் பெரியாறு, மூலவைகை ஆறு, கொட்டகுடி ஆறு, வராகநதி, மஞ்சளாறு ஆகியவற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

மழைநீர் மற்றும் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படக் கூடிய ஆற்றங்கரையோர பகுதிகள் மற்றும் தாழ்வான பகுதிகள் பட்டியலிடப்பட்டு வருவாய் துறை, உள்ளாட்சி அமைப்பு, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, பொதுப்

பணித் துறை, பொதுச் சுகாதாரத் துறை மற்றும் காவல் துறை உள்ளிட்ட அனைத்து அரசுத் துறை பணியாளர்கள் ஒருங்கிணைந்த கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வெள்ள அபாய பகுதிகள்: பெரியகுளம் நகராட்சியில் பட்டாளம்மன் கோயில் தெரு, கூடலூர் நகராட்சியில் அருந்ததியர் ஓடைத்தெரு, சுக்காங்கல்பட்டி தெரு, ராஜீவ் காந்தி நகர், எம்.ஜி.ஆர். காலனி, கம்பம் நகராட்சியில் கம்பம் மெட்டு காலனி, மாலையம்மாள் புரம், காமயகவுண்டன்பட்டி சாலை, சுருளிப்பட்டி சாலை, போடி நகராட்சியில் புதூர், சன்னாசிபுரம், தேனி அல்லி நகரம் நகராட்சியில் கம்போஸ்டு ஓடைத் தெரு, ஸ்ரீராம் திரையரங்கு சாலை, சோலைமலை அய்யனார் கோயில் சாலை, கருவேல்நாயக்கன்பட்டி ஆகிய இடங்கள் வெள்ள அபாயம் உள்ள இடங்களாக கண்டறியப்பட்டுள்ளன.

பூதிப்புரம் பேரூராட்சியில் ஆதிபட்டி, மீனாட்சிபுரம் பேரூராட்சியில் பொட்டல்குளம், துரைராஜபுரம் காலனி, அணைக்கரைப் பட்டி, உத்தமபாளையம் பேரூராட்சியில் களிமேட்டுப்பட்டி, ஞானம்மன் கோயில் தெரு, தேனி, பெரியகுளம், உத்தமபாளையம் வட்டாரங்களில் தலா 4 கிராமங்கள், ஆண்டிபட்டி, போடி வட்டாரங்களில் தலா 6 கிராமங்கள் உள்பட தாழ்வான பகுதிகளில் உள்ள மொத்தம் 23 கிராமங்கள் வெள்ள அபாயம் உள்ள இடங்களாக பட்டியலிடப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டால் பொதுமக்களை பாதுகாப்பாக தங்க வைக்க திருமண மண்டபம், சமுதாயக் கூடம் மற்றும் பள்ளிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என வருவாய்த் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உத்தமபாளையம் வட்டாரத்தில் பலத்த மழை: முல்லைப் பெரியாற்றில் பெருக்கெடுத்து ஓடும் நீர்

உத்தமபாளையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த மழை பெய்ததை தொடர்ந்து முல்லைப் பெரியாற்றில் அதிக அளவு தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

உத்தமபாளையம், ராயப்பன்பட்டி, சின்னமனூர், கம்பம், கூடலூர் போன்ற பகுதிகளில் புதன்கிழமை மாலை பலத்த மழை பெய்தது.

இரவு முழுவதும் நீடித்த இம்மழையால் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

முல்லைப் பெரியாறு நீர் பிடிப்பு பகுதியிலும் மழை பெய்வதால் அணைக்கு விநாடிக்கு 1870 கன அடி நீர் வரத்து உள்ளது. 570 கன அடிநீர் வெளியேற்றப்படுகிறது. இதனுடன் உத்தமபாளையம் வட்டாரத்தில் பெய்த மழையால் 1000 கன அடிக்கு மேல் முல்லைப் பெரியாற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

**மழை இல்லை: நெற்பயிர் பாதிப்பு: இளையான்குடி விவசாயிகள் கவலை**

இளையான்குடி பகுதியில் போதிய மழை பெய்யாததால் பயிர்களுக்கு களையெடுக்க முடியாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியத்தில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இளையான்குடியைச் சுற்றிலும் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. கடந்த ஆண்டு இப்பகுதியில் நல்ல மழை பெய்து விவசாயம் நடந்தது. ஒவ்வொரு ஆண்டும் ஆவணியில் விவசாயிகள் உழவுப் பணியை துவங்கி விடுவது வழக்கம். நடப்பாண்டில் மழை தாமதமாக பெய்ததையடுத்து விவசாயிகள் புரட்டாசி மாதத்தில் உழவு செய்து விதைப்பு செய்தனர். அடுத்தடுத்து மழை பெய்ததால் பயிர்கள் தளிர்த்து வளரத் துவங்கியது. விவசாயிகள் தொடக்க விவசாய கூட்டுறவு கடன் சங்கங்களில் கடன் பெற்று உரங்களை வாங்கி வீடுகளில் இருப்பு வைத்தனர். இந்நிலையில், தொடர்ந்து மழை இல்லாததால் கண்மாய்களில் தண்ணீர் இல்லாத நிலையில்,பயிர்களுக்கு களை எடுக்க முடியாமலும், உரம் போட முடியாத நிலையிலும் விவசாயிகள் உள்ளனர். கடந்த வாரம் உருவான புயலால் மழை பெய்யும் என எதிர்பார்த்திருந்த இப் பகுதி விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. சில இடங்களில் மட்டும் சாரல் மழை பெய்தது. போதுமான தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் பயிர்களுக்கு பருவத்தில் செய்ய வேண்டிய களையெடுப்பு, உரம் போடும் பணியை செய்ய முடியாமல் அவதிப்படுகின்றனர்.

**தொடர் மழை: ராஜபாளையத்தில் 20-க்கும் மேற்பட்ட கண்மாய்கள் நிரம்பின: ஐயனார் ஆற்றில் வெள்ளப் பெருக்கு**

ராஜபாளையத்தில் இரு நாள்களாக பெய்துவரும் மழையால் 20-க்கும் மேற்பட்ட கண்மாய்கள் நிரம்பின.

ராஜபாளையத்தில் நவம்பர் மாதம் முதல் பரவலாக மழை பெய்து வந்தாலும் அதிகபட்சமாக புதன்கிழமை 80மி.மீ., வியாழக்கிழமை 98 மி.மீ. அளவுக்கு மழை பதிவானது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஐயனார் கோயில் ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் தண்ணீர் நீர்தேக்கத்துக்கு செல்வதுடன் இப்போது தடுப்பணையையும் தாண்டி கண்மாய்களுக்கும் செல்லத் தொடங்கியுள்ளது.

இதனால் நகரின் முக்கிய விவசாய கண்மாய்களான கொண்டனேரி கண்மாய், புதுக்குளம் கண்மாய், பிறண்டை குளம் கண்மாய், கருங்குளம் கண்மாய், கடம்பன் குளம் கண்மாய் உள்ளிட்ட பல்வேறு நீர் நிலைகளுக்கு முடங்கியாறு வழியாக தண்ணீர் சென்று நிரம்பியுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து ராஜபாளையம் வட்டாட்சியர் பொன்ராஜ் கூறியதாவது: ராஜபாளையம் பகுதியில் பெய்த மழையால் வியாழக்கிழமை காலை வரை 11 பொதுப்பணித் துறை கண்மாய்கள் உள்பட 20 கண்மாய்கள் நிரம்பியுள்ளன.

தேவதானம் சாஸ்தாகோயில் வனப்பகுதியிலும் நல்ல மழை பெய்து நகரிஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் சாஸ்தாகோயில் நீர்த்தேக்கம் நிரம்பி உபரிநீர் தேவதானம், முகவூர் கண்மாய்களுக்குச் சென்று நிரம்பி வருகிறது.

இந்த மழையால் மங்காபுரம், கொத்தங்குளம் பகுதிகளில் 2 வீடுகளின் சுவர்கள் இடிந்து சேதமானது. பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது என்றார் அவர்.

ராஜபாளையம் பகுதியில் பெய்த மழையால் திருவள்ளுவர் நகர் விளையாட்டு மைதானங்களில் தண்ணீர் தேங்கி அருகில் உள்ள அரசு அலுவலகங்களை சுற்றியும் தண்ணீர் தேங்கியது.

மலைப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் சுற்றுலாப் பயணிகள் ஐயனார் கோயில் ஆற்றின் நடுப்பகுதியில் இறங்கிக் குளிக்க வனத்துறையினர்

தடை விதித்துள்ளனர். வியாழக்கிழமை ஐயனார் கோயில் ஆறு உள்ள வனப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வந்ததால் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது.

நிரம்பிய குடிநீர்த் தேக்கம்: கடந்த சில நாள்களாக வனப்பகுதியில் பலத்த மழை பெய்ததால் ஐயனார் கோயில் ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்து ஆறாவது மைல் குடிநீர்த் தேக்கத்துக்கு அதிகளவில் தண்ணீர் வந்தது.

இதுகுறித்து ராஜபாளையம் நகர்மன்றத் தலைவர் பி.எஸ்.தனலட்சுமி கூறியதாவது: ராஜபாளையம் நகருக்கு குடிநீர் தரும் ஆறாவது மைல் குடிநீர்த் தேக்கத்தில் முதன்முறையாக வியாழக்கிழமை 20 அடி வரை தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளது. அதிகபட்சமாக இதுவரை 18 அடி தண்ணீரே நிரம்பியது. இரண்டாவது குடிநீர்த் தேக்கத்தில் 10 அடி தண்ணீர் உள்ளது. இதனால் ராஜபாளையம் நகர்ப் பகுதியில் இப்போது 6 முதல் 7 நாள்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

நகர்ப் பகுதியில் இப்போது வீடுகளில் குடிநீர் இணைப்பு அதிகமாகிவிட்டதால் இப்பகுதியில் மேலும் இரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ரூ.2 கோடி மதிப்பில் கட்டப்பட உள்ளன. இந்த பணிகள் முடிவடைந்ததும் ராஜபாளையத்தில் உள்ள வீடுகளுக்கு கூடுதல் தண்ணீர் விநியோகிக்கப்படும் என்றார் அவர். அப்போது விருதுநகர் மாவட்ட ஜெயலலிதா பேரவைச் செயலர் பி.பி.செல்வசுப்பிரமணியராஜா உடனிருந்தார்.

கரை திரும்ப முடியாதவர்கள் மீட்பு: ராஜபாளையம், மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்த மழையால் மலையடிவாரத்தில் உள்ள ஐயனார் கோயில் ஆற்றில் நீர்வரத்து அதிகரித்தது. வியாழக்கிழமை வனப்பகுதியில் திடீரென பலத்த மழை பெய்ததால் இந்த ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அப்போது மாவட்ட ஆட்சியர் ராஜாராமன், தனிஅதிகாரி கிருஷ்ணன் ஆகியோர் அப்பகுதியை பார்வையிட வந்தனர்.

ஐயனார் கோயில் ஆற்றில் தண்ணீர் அதிகளவில் சென்றதால் ஆற்றின் மறுபுறமுள்ள ஐயனார் கோயிலுக்குச் சென்றவர்கள் கரை திரும்பமுடியாமல் தவித்தனர். தகவலறிந்த ராஜபாளையம் தீயணைப்புத் துறையினர் அங்கு சென்று ஆற்றின் மறுகரையோரம் இருந்த 30 பேரை பாதுகாப்பாக மீட்டனர்.

**பிளவக்கல் அணைப் பகுதியில் 131 மி.மீ. மழை**

விருதுநகர் மாவட்டம், பிளவக்கல் அணைப் பகுதியில் புதன்கிழமை 131 மி.மீ. மழை பெய்துள்ளது.

இதேபோல் சாத்தூரில் 9 மி.மீ., சிவகாசியில் 29.2 மி.மீ., ஸ்ரீவில்லிபுத்தூரில் 56 மி.மீ., வெம்பக்கோட்டை அணைப் பகுதியில் 7.4 மி.மீ., வத்திராயிருப்பில் 49 மி.மீ., கோயிலாறு அணைப்பகுதியில் 83 மி.மீ. மழை பெய்துள்ளது.

**10 ஆண்டுகளுக்குப் பின் வெம்பக்கோட்டை அணைக்கு நீர்வரத்து: விவசாயிகள் மகிழ்ச்சி**

வெம்பக்கோட்டை அணைக்கு 10 ஆண்டுகளுக்குப் பின் தண்ணீர் வரத் தொடங்கியுள்ள நிலையில் பழுதான ஷட்டர்களை சீரமைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

சாத்தூர் அருகே வெம்பக்கோட்டை அணை 1986ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் சுமார் ரூ.5.30 கோடி செலவில் அமைக்கப்பட்டது. இந்த அணை முழு கொள்ளளவான 23.3 அடியை இதுவரை எட்டியதில்லை. இப்போது பெய்து வரும் மழையால் கடந்த 4 நாள்களில் இந்த அணை 10 அடி கொள்ளளவை எட்டியுள்ளது. இந்த அணை முழுவதும் நிரம்பினால் சுமார் 8100 ஏக்கர் பரப்பளவுள்ள விளைநிலங்களில் சோளம், நெல், காய்கனிகள் உள்ளிட்ட பயிர்கள் விளைவிக்கப்படும் நிலை உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். இந்த அணையின் இரண்டு மதகுகள் மூலம் நீர் திறக்கப்பட்டு 5 ஷட்டர்கள் மூலம் விவசாயத்திற்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. வலது கால்வாய்கள் மூலம் திறந்து விடப்படும் நீரின் மூலம் பனையடிபட்டி,சூரன்குடி உள்ளிட்ட கிராமங்களும், இடது கால்வாய்கள் மூலம் வெம்பக்கோட்டை, விஜயகிரிசல்குளம்,சல்வார்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களும் பயனடைகின்றன.

இந்நிலையில் ஷட்டர்களில் பழுது ஏற்பட்டுள்ளதால் தண்ணீர் கசிவு ஏற்பட்டு அணையிலிருந்து நீர் வீணாகி வருவதாகக் கூறப்படுகிறது. இதனால் அணையின் கொள்ளளவு குறையும் சூழ்நிலை உள்ளது.

எனவே இந்த ஷட்டர்களை போர்க்கால அடிப்படையில் சீரமைத்து அணைக்கு வரும் நீரை சேமித்து விவசாயிகள் பயன்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், இந்த அணையில் மீன்குஞ்சுகளை வளர்க்க மீன்வளத் துறை அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும், இப்பகுதியில் உள்ள கருவேல மரங்களை அழிக்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறியதாவது: அணையில் உள்ள கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

அணைக்கு வரும் நீரை சேமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 70.14 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 70.14 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,992 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 500 கன அடி நீரும், வாய்க்காலில் 1,800 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 11.01 டி.எம்.சி.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 70.14 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 70.14 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,992 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 500 கன அடி நீரும், வாய்க்காலில் 1,800 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 11.01 டி.எம்.சி.

### குன்னூரில் சாரல் மழை

குன்னூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் பனி மூட்டத்துடன் சாரல் மழை வியாழக்கிழமை பெய்தது.

குன்னூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த 13 நாள்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில இங்குள்ள மலைப் பாதையில் மேக மூட்டம் அதிகரித்து காணப்படுகிறது. வியாழக்கிழமை காலை முதல் மேக மூட்டம் அதிகரித்து, பல இடங்களில் பரவலாக மழையும் பெய்து வருவதால் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இதன் காரணமாக குன்னூர் - மேட்டுப்பாளையம், குன்னூர் - கோத்தகிரி மலைப் பாதையில் பயணிக்க கூடுதல் நேரம் அதிகமாகிறது. சாலையில் மூடுபனி அதிகமாக இருப்பதால் வாகன ஓட்டிகள் முகப்பு விளக்குகளை எரிய விட்டு, மிகுந்த கவனத்துடன் வாகனங்களை இயக்கி வருகின்றனர்.

இங்குள்ள சுற்றுலாத் தலங்களுக்கு வருவோர் மேக மூட்டம் அதிகரித்து காணப்படுவதால் காட்சி முனைகளைக் கண்டுகளிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

**வடகிழக்குப் பருவ மழை: உதகையில் கண்காணிப்புக் குழுக் கூட்டம்**

வடகிழக்குப் பருவ மழை முன்னேற்பாடுகள் தொடர்பான கண்காணிப்புக் குழுக் கூட்டம் உதகையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

நீலகிரி மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுகள், மாவட்டத்தில் இதுவரை வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள் தொடர்பாக மண்டல அலுவலரும், தமிழக அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை முதன்மைச் செயலருமான பி.டபிள்யு.சி.டேவிதர் உதகையில் வியாழக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் முன்னிலையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வட்ட அளவில் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அமைக்கப்பட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் அடங்கிய குழுக்களின் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பலத்த மழைக் காலங்களில் மரம் விழுதல், நிலச்சரிவு ஆகியவற்றை உடனடியாகக் கண்டறிந்து உடனுக்குடன் அப்புறப்படுத்தவும், சேதமடைந்த வீடுகளை உடனுக்குடன் கணக்கெடுத்து நிவாரண உதவிகள் வழங்கவும், மழை வெள்ளம் தேங்கும் பகுதிகளில் உள்ள மக்களை நிவாரண முகாம்களில் தங்க வைத்து, உணவு மற்றும் பிற தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அந்தப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் அமைத்து நோய் ஏற்படாதவாறு பாதுகாக்கவும் குழுக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

அதேபோல, குழுக்களில் உள்ள அலுவலர்கள் ஒன்றிணைந்து, முழு ஒத்துழைப்போடு பேரிடர் மீட்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முரளி ரம்பா, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் ஸ்ரீனிவாச ரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கர பாண்டியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் கவிதா ஆகியோருடன் அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**மாவட்டத்தில் பரவலாக மிதமான மழை**

வேலூர் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் புதன்கிழமை மிதமான மழை பெய்தது.

வடகிழக்குப் பருவமழை காரணமாக மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக பலத்த மழை பெய்ததால் பெரும்பாலான நீர்நிலைகளில் நீர் பெருகியதுடன், பாலாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

தொடர் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டதுடன், காய்கறிகளின் வரத்து குறைவால் விலை கடுமையாக அதிகரித்தது. மழை காரணமாக மாவட்டத்தில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டதுடன், பல்கலைக்கழகத் தேர்வுகளும் ஒத்திவைக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை மழை இல்லாததால் இனிமேல் பெய்யாது எனக் கருதி அனைத்துப் பள்ளிகளும் வியாழக்கிழமை திறக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் அறிவித்தது.இந்த நிலையில், வேலூர் மாநகர் மட்டுமல்லாது மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் வியாழக்கிழமை பிற்பகல் முதல் மிதமான மழை பெய்யத் தொடங்கியது. இதனால் பள்ளி முடிந்து வீடுகளுக்குத் திரும்பிய மாணவ, மாணவிகள் மழையில் நனைந்தபடி செல்ல நேரிட்டது.

மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8 மணிமுதல் வியாழக்கிழமை காலை 8 மணி வரை பதிவான மழை அளவு விவரம் (மி.மீட்டரில்): அரக்கோணம்-6.50, குடியாத்தம்-6.60, சோளிங்கர்-6, திருப்பத்தூர்-1.30, வாணியம்பாடி-1.20, வேலூர்-2.40, வாலாஜாபேட்டை- 4, ஆலங்காயம்-3, மேல் ஆலத்தூர்-6.20, ஆற்காடு-3.20. தொடர் மழை காரணமாக குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரில் கொசுக்கள் உற்பத்தியாகி தொற்று நோய் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் மாநகராட்சி, சுகாதாரத் துறை அதிகாரிகள் ஈடுபட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**காவேரிப்பாக்கத்தில் 1,000 ஏக்கர் நெற்பயிர்கள் பாதிப்பு**

காவேரிப்பாக்கம் பகுதியில் சுமார் 1,000 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் சேதம் அடைந்தன.

தொடர்ந்து பெய்த பலத்த மழை காரணமாக, மாவட்டத்தின் மிகப் பெரிய ஏரியான காவேரிப்பாக்கம் ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. மேலும் இப்பகுதியில் உள்ள 7 ஏரிகள் நிரம்பின.

காவேரிப்பாக்கம் சுற்றுவட்டாரப் பகுதி மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். காவேரிப்பாக்கத்தை அடுத்த கர்ணாவூர், சிறுவளையம், பன்னீயூர், புதுப்பட்டு, தப்பூர், மாமண்டூர், கரிவேடு, பெருவளையம், மங்கலம், கீழ்வீராணம் உள்ளிட்ட

பல்வேறு கிராமங்களில் வெள்ள நீர், பாசனக் கால்வாய்கள் வடிநீர் கால்வாய்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாலும் 1,000-க்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்களில் பயிரியிடப்பட்ட நெற்பயிர்கள் அறுவடைக்கு சில நாள்கள் உள்ள நிலையில் முழுவதும் சேதம் அடைந்து முளைத்து பாழாகி விவசாயிகளை துயரத்தில் ஆழ்த்தியுள்ளன. மேலும் 100-க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிரிடப்பட்ட நிலக்கடலை பயிரும் அழுகின.

நிவாரணத்தொகை வழங்க கோரிக்கை: இதுகுறித்து விவசாயிகள் சங்க வேலூர் கிழக்கு மாவட்ட தலைவர் சுபாஷ் கூறியது:

ஒரு ஏக்கர் நெற் பயிருக்கு குறைந்தபட்சம் ரூ. 20,000 செலவாகிறது. ஒரு ஏக்கருக்கு நிவாரணத் தொகையாக அரசு ரூ. 5,400 வழங்க உள்ள நிலையில் அதனை ரூ.15,000ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என்றார்.

பயிர்ச் சேதம் நிலவரங்களை வருவாய் ஆய்வாளர்கள் சண்முகம் (காவேரிப்பாக்கம்), செல்வி (பாணாவரம்), வேளாண் அலுவலர் லீலாவதி, உதவி அலுவலர்கள் அன்பரசு, நவமணி, பாஸ்கர், மணிவண்ணன் ஆகியோர் பார்வையிட்டு புள்ளி விவரங்களைச் சேகரித்து மாவட்ட நிர்வாகத்துக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சேத விவரங்கள் குறித்து காவேரிப்பாக்கம் வேளாண் உதவி இயக்குநர் ஸ்டீபன் ஜெயக்குமாரிடம் கேட்டதற்கு காவேரிப்பாக்கம் ஒன்றியத்துக்கு உள்பட்ட பல கிராமங்களில் விவசாயப் பயிர்கள் சேதம் அடைந்துள்ளன. சேதம் அடைந்த விளை நிலங்களின் உரிமையாளர்கள் சேத விவரங்கள் குறித்து வேளாண்மை விரிவாக்க அலுவலர்களிடம் மனுவாக அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**குமரியில் தொடரும் மழை: அணைகளிலிருந்து உபரி நீர் மீண்டும் வெளியேற்றம்**

குமரி மாவட்டத்தில் மழை மீண்டும் பெய்யத் தொடங்கியதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதையடுத்து பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலிருந்து மீண்டும் உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

விடிய, விடிய மழை: மாவட்டத்தில் இரண்டு நாள்கள் ஓய்வுக்குப் பின் மீண்டும் மழை தீவிரமடைந்துள்ளது.

புதன்கிழமை பிற்பகல் முதல் நாகர்கோவில், கொட்டாரம், மயிலாடி, ஆரல்வாய்மொழி மற்றும் அணைப்பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இந்த மழை வியாழக்கிழமையும் தொடர்ந்தது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து வெகுவாக அதிகரித்தது. இதனால், பேச்சிப்பாறை அணையின் மறுகால் மதகுகள் வியாழக்கிழமை திறக்கப்பட்டு விநாடிக்கு 1000 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையிலிருந்து விநாடிக்கு 800 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்பட்டது.

அணைகளில் நீர்மட்டம்: வியாழக்கிழமை காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 45.88 அடியாக இருந்தது. அணைக்கு 1,466 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 74.35 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 2000 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 15.48 அடியாகவும், சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 15.58 அடியாகவும் இருந்தது. இந்த அணைகளுக்கு முறையே 206 மற்றும் 210 கன அடி நீர்வரத்து இருந்தது.

பொய்கை அணையின் நீர்மட்டம் 18.50 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 210 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடியாக இருந்தது. அணைக்கு வரும் 73 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்பட்டது.

மழை அளவு (மி.மீ.): பேச்சிப்பாறை 58, பெருஞ்சாணி 39, சிற்றாறு 1- 80, சிற்றாறு 2- 57.4, பொய்கை 66, மாம்பழத்துறையாறு 47, இரணியல் 16.2, ஆனைக்கிடங்கு 41, குளச்சல் 52.6, குருந்தன்கோடு 59.4, அடையாமடை 5,

கோழிப்போர்விளை 22.1, முள்ளங்கனாவிளை 18, புத்தன் அணை 40, திற்பரப்பு 14, நாகர்கோவில் 54, பூதப்பாண்டி 45.2, சுரளகோடு 30.2, கன்னிமார் 28.4, ஆரல்வாய்மொழி 66, பாலமோர் 39.6, மயிலாடி 53.2, கொட்டாரம் 76.4.

மழை காரணமாக மாவட்டத்தில் தொழில்கள் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளன.

### 4 ஆண்டுக்குப் பிறகு நிரம்பும் வீடூர் அணை: விவசாயிகள் மகிழ்ச்சி

விழுப்புரம் அருகே உள்ள வீடுர் அணை 4 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த அக்.30ஆம் தேதி தொடங்கி வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. இடையே, எழுந்த புயல் சின்னம் காரணமாக மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்தது.

இதைத்தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள முக்கிய நீராதாரங்கள் நிரம்பி வருகின்றன. இதில், விழுப்புரம் அருகே உள்ள வீடூர் அணையும் மழையினால் நீர்வரத்து அதிகரித்து வேகமாக நிரம்பி வருகிறது.

அணையின் மொத்தக் கொள்ளளவு 32 அடியாகும். தற்போது நீர்மட்டம் 28 அடியை எட்டியுள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 209 மில்லியன் கனஅடியாக உள்ளது. மழையின்மையால் கடந்தாண்டு 12.7 அடி மட்டுமே நீர்மட்டம் உயர்ந்தது. வறண்டு கிடந்த அணை 4 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போதுதான் நிரம்பியுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த அணையின் மூலம் வீடுர், பொம்பூர், சிறுவை, பொண்ணம்பூண்டி, கடகம்பட்டு, ஐவேலி, நெமிலி, கோரக்கேணி உள்ளிட்ட கிராமங்களுக்கு உள்பட்ட சுமார் 2,200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மேலும், புதுவை மாநிலத்தில் உள்ள புதுக்குப்பம், காட்டேரிக்குப்பம், சுத்துக்கேணி, தேத்தாம்பாக்கம், லிங்காரெட்டிப்பாளையம், வில்லியனுார் உள்ளிட்ட 1,200 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும். இதனால், புதுவை, விழுப்புரம் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

### 4 ஆண்டுக்குப் பிறகு நிரம்பும் வீடூர் அணை: விவசாயிகள் மகிழ்ச்சி

விழுப்புரம் அருகே உள்ள வீடுர் அணை 4 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த அக்.30ஆம் தேதி தொடங்கி வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. இடையே, எழுந்த புயல் சின்னம் காரணமாக மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்தது.

இதைத்தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள முக்கிய நீராதாரங்கள் நிரம்பி வருகின்றன. இதில், விழுப்புரம் அருகே உள்ள வீடூர் அணையும் மழையினால் நீர்வரத்து அதிகரித்து வேகமாக நிரம்பி வருகிறது.

அணையின் மொத்தக் கொள்ளளவு 32 அடியாகும். தற்போது நீர்மட்டம் 28 அடியை எட்டியுள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 209 மில்லியன் கனஅடியாக உள்ளது. மழையின்மையால் கடந்தாண்டு 12.7 அடி மட்டுமே நீர்மட்டம் உயர்ந்தது. வறண்டு கிடந்த அணை 4 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போதுதான் நிரம்பியுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த அணையின் மூலம் வீடூர், பொம்பூர், சிறுவை, பொண்ணம்பூண்டி, கடகம்பட்டு, ஐவேலி, நெமிலி, கோரக்கேணி உள்ளிட்ட கிராமங்களுக்கு உள்பட்ட சுமார் 2,200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மேலும், புதுவை மாநிலத்தில் உள்ள புதுக்குப்பம், காட்டேரிக்குப்பம், சுத்துக்கேணி, தேத்தாம்பாக்கம், லிங்காரெட்டிப்பாளையம், வில்லியனூர் உள்ளிட்ட 1,200 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும். இதனால், புதுவை, விழுப்புரம் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வலியுறுத்தல்**

மாவட்டத்தில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என தமிழக உழவர் முன்னணி வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக அந்த அமைப்பின் பொதுச்செயலர் தங்க.கென்னடி தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கடித விவரம்:

பருவ மழையாலும், புயலாலும் கடலூர் மாவட்டம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. குறிப்பாக வீராணம் ஏரியில் முழுக் கொள்ளளவு நீர் இருந்தும் ஜூலை மாதத்தில் பாசனத்துக்கு நீர் திறந்து விடாமல் இருந்ததால், விவசாயிகள் நேரடி விதைப்புக்கு மாறினர்.

போதிய மழை இல்லாததால் நெல் முளைப்பு இல்லாமல் நஷ்டம் ஏற்பட்டது. காலம் கடந்து செப்டம்பரில் திறந்துவிடப்பட்ட நீரில் விதைப்பு மேற்கொண்ட

விவசாயிகளின் இளம் பயிர்கள், தற்போது மழை காரணமாக திடீரென திறந்துவிடப்பட்ட வீராணம் நீரால் மூழ்கி சேதத்தை சந்தித்துள்ளன.

சென்னைக்கு நீர் கொண்டு செல்வதற்கு முன்னுரிமை கொடுத்து உரிய காலத்தில் பாசனத்துக்கு நீர் திறந்து விடாததால், விவசாயிகள் ஆண்டுதோறும் இழப்பை சந்திக்க வேண்டியுள்ளது.

எனவே விவசாயிகளின் பயிர் சேதத்துக்கு தமிழக அரசு பொறுப்பேற்று, கடலூர் மாவட்டத்தை இயற்கை பேரிடர் பாதிப்பு மாவட்டமாக அறிவிக்க வேண்டும். மேலும், நெற்பயிர் ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம், கரும்பு ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம், வாழை ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் முழு இழப்பீடு வழங்க வேண்டும். வீராணம் ஏரி விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் ஏரியை சிதம்பரம் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்க வேண்டும் என அந்த கடிதத்தில் தங்க.கென்னடி தெரிவித்துள்ளார்.

**மழை பாதித்த விவசாய நிலங்களில் துணைநிலை ஆளுநர் ஆய்வு**

புதுச்சேரியில் மழை பாதித்த விவசாய நிலங்களில் துணைநிலை ஆளுநர் ஏ.கே.சிங் வியாழக்கிழமை நேரில் ஆய்வு செய்தார்.

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையால், தமிழகம்-புதுச்சேரியில் கடந்த 10 நாள்களாக பலத்த மழை பெய்தது. இதனால் புதுவையில்

பலத்த மழை சேதம் ஏற்பட்டது. குறிப்பாக பாகூர், வில்லியனூர், கிருமாம்பாக்கம்,திருக்கனூர், திருபுவனை, மண்ணாடிப்பட்டு பகுதிகளில் விவசாய நிலங்களில்

அதிக பாதிப்பு ஏற்பட்டது. கிராமப்புறப் பகுதிகளில் விவசாய நிலங்கள் நீரில் முழ்கி உள்ளன. நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்ட நெல், வாழை, கரும்பு, வெற்றிலை போன்ற பயிர்கள் நீரில் முழ்கி அழுகி உள்ளன.

இவற்றை துணைநிலை ஆளுநர் சிங் நேரில் சென்று பார்வையிட்டார். வில்லியனூர், சேந்தமாநத்தம், கோர்க்காடு, கரிக்கலாம்பாக்கம், தவளக்குப்பம் ஆகிய கிராமங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தார். மத்திய அரசிடம் பேசி நிவாரண உதவிகளை துரிதமாக பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாக சிங் தெரிவித்தார்.

மழை சேத பாதிப்பு குறித்து துணைநிலை ஆளுநர் சிங்கிடம், புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் டி.மணிகண்டன் விளக்கினார். இந்நிகழ்ச்சியின் போது

துணை ஆட்சியர் ராஜமாணிக்கம், வட்டாட்சியர் சிவசங்கரன், வேளாண் அதிகாரி ரவிபிரகாசம் ஆகியோர் உடனிருந்தனர். பின்னர் பெரிய ஏரியான ஊசுட்டேரியையும் ஆளுநர் சிங் பார்வையிட்டார்.

அரசின் இணையதள சேவை குறித்து ஆய்வு: பின்னர் ராஜ்நிவாஸில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய தகவல் மைய அலுவலர்கள், அரசின் இணையதள சேவை பாதுகாப்புக் குறித்து ஆளுநர் சிங்குக்கு விவரித்தனர். அனைத்து அரசுத் துறைகளிலும் இணையதள சேவை பாதுகாப்புத் திட்டத்தை 2 வாரங்களில் செயல்படுத்தவும் அவர் உத்தரவிட்டார். மேலும் தலைமைச் செயலர் மனோஜ் பரிதா, டி.ஐ.ஜி. கண்ணன் ஜெகதீசன் ஆகியோர் நிர்வாகம், சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து விவரித்தனர்.

முதல்வருக்கு ஆறுதல்: முதல்வர் ரங்கசாமியின் தாயார் பாஞ்சாலி அம்மாள் அண்மையில் காலமானார். இந்நிலையில், ஆளுநர் சிங் வியாழக்கிழமை நேரில் அவரது வீட்டுக்குச் சென்று ஆறுதல் கூறினார்.

**காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் மீன் குஞ்சுகள் விற்பனை தொடக்கம்**

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் நவீன மீன் குஞ்சு பொறிப்பகம் மூலம் உற்பத்தி செய்த மீன் குஞ்சுகள், விவசாயிகளுக்கு மிகக் குறைந்த விலையில் விற்பனையை தலைவர் ஆ.சுரேஷ் வியாழக்கிழமை தொடங்கிவைத்தார்.

விவசாயிகள் மீன் வளர்ப்பில் ஈடுபடும் வகையில் நவீன மீன் குஞ்சு பொறிப்பகம் அமைக்கப்பட்டு, மீன் குஞ்சு வளர்ப்பு செய்யப்பட்டு வருகிறது. காரைக்கால் பகுதியில் உள்ள மீன் வளர்ப்பு ஆர்வலர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த மீன் குஞ்சுகள் விவசாயிகளுக்கு மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

மீன் குஞ்சு விற்பனையை வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ஆ.சுரேஷ் தொடங்கிவைத்து பேசியதாவது: இங்குள்ள பொறிப்பகம் மூலம் நன்னீர் மீன் வளர்ப்பாக, கட்லா, ரோகு, மிர்கால் ரக கெண்டை மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மீன்கள் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

விவசாயிகள் இதனை வாங்கி லாப மீட்டும் வகையில் தொழில் செய்ய முன் வரவேண்டும். நிலையத்தில் இதற்காக அளிக்கப்படும் பயிற்சியிலும் விவசாயிகள் பங்கேற்க வேண்டும் என்றார்.

நிலைய முதல்வர் கோ.விஜயக்குமார் கூறியதாவது: கெண்டை மீன் வகைகள் 3 இன்ச் அளவில் வளர்ந்தவுடன் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. தாய் மீனுக்கு ஊசி போட்டு கருவுறச் செய்யப்படுகிறது. 45 நாள்கள் வளர்ப்பு செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. 10 முதல் 12 மாதத்தில் 1 முதல் 1.5 கிலோ எடை கொண்டதாக மீன் வளரும் என்றார்.

## விடிய, விடிய மழை: பயிர்கள் பாதிப்படையும் அபாயம்

புதுச்சேரி நகரில் வியாழக்கிழமை விடிய விடிய மிதமான மழை பெய்தது.

இதனால் ஏற்கெனவே மழையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயப் பயிர்களுக்கு மேலும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக கடந்த 10 நாள்களாக புதுச்சேரியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலை ஆந்திரா அருகே நிலை கொண்டுள்ளது. கிருமாம்பாக்கம், திருக்கனூர், திருபுவனை உள்பட கிராமப்புறங்களில் சில தினங்களுக்கு முன் கன மழை பெய்தது.

கடந்த 2 நாள்களாக புதுவையில் மழை பெய்வது ஓயந்திருந்தது. இந்நிலையில், வியாழக்கிழமை அதிகாலை முதல் புதுச்சேரியில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவிகள் மற்றும் அலுவலகம் செல்வோர், கடைவீதிக்குச் செல்லும் பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகினர். பல கிராமங்களில் மழையால் பாதிக்கப்பட்டிருந்த வாழை, நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களுக்கு, வியாழக்கிழமை பெய்து வரும் மழை மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

## தொடர் மழை : நெற்பயிர்களில் நோய் தாக்குதல்

தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடர் மழையால் சம்பா பருவ நெல் பயிர்களில் நோய் தாக்குதல் காணப்படுகிறது.

மாவட்டத்தில் 1,38,500 ஹெக்டேரில் சம்பா, தாளடி பருவத்தில் நெல் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டது. இதில், சம்பா பருவத்தில் 92,648 ஹெக்டேரிலும், தாளடி பருவத்தில் 25,955 ஹெக்டேரிலும் என மொத்தம் 1,18,603 ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டது.

அண்மையில் பெய்த தொடர் மழையால் கும்பகோணம், திருவிடைமருதூர் வட்டாரங்களில் 392 ஹெக்டேரில் பயிர்கள் மூழ்கின.

கடந்த திங்கள்கிழமை முதல் மழை இல்லாததால் 8 ஹெக்டேரை தவிர மற்ற இடங்களில் தண்ணீர் வடிந்துவிட்டது. மேலும், பாதிப்பு விவரம் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. நீரில் மூழ்கிய பயிர்களுக்கு சிங் சல்பேட், யூரியா உரங்கள் இட்டால், பயிர்கள் மீண்டும் புத்துயிர் பெறும் என்றும், சிங் சல்பேட் 50 சத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன எனவும் வேளாண் துறையினர் தெரிவித்தனர். இந்நிலையில், தஞ்சாவூர் அருகேயுள்ள ஆலக்குடி, கண்டிதம்பேட்டை, கள்ளப்பெரம்பூர் ஆகிய பகுதிகளில் சம்பா பயிரிடப்பட்டுள்ள 178 ஹெக்டேரில் இலைக்கருகல் நோய் காணப்படுகிறது. இதனால், நெற் கதிரில் இலைகள் கருகி வருகின்றன. இதுகுறித்து வேளாண் துறை இணை இயக்குநர் இரா. ஞானஒளி தெரிவித்தது:

தொடர் மழையால் நெல் பயிரில் இலைக்கருகல் நோய் தென்பட வாய்ப்புள்ளது. எனவே, 40 கிலோ புதிதாக இட்ட பசுஞ்சாணத்தையும், 2 கிலோ சூடோமோனாஸ் புளூரசன்னஸ்சும் 50 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் ஊற வைத்து, மறுநாள் வடிகட்ட வேண்டும். பின்னர், வடிகட்டிய நீரை தண்ணீர் கலந்து 200 லிட்டராக்கி ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும். அல்லது காப்பர் ஆக்சிகுளோரைடு தெளிக்க வேண்டும் என்றார் ஞானஒளி.'

**மரவள்ளிக் கிழங்கு விலை வீழ்ச்சி: விவசாயிகள் கவலை**

பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட மரவள்ளி கிழங்குகளின் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்ததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பெரம்பலூர் மாவட்டத்தில் கோரையாறு, கொட்டாரக்குன்னு, மேட்டூர், பூலாம்பாடி, பெரியம்மாபாளையம், மளையாளப்பட்டி, கவுண்டர்பாளையம், நக்கசேலம், அம்மாபாளையம் உள்ளிட்ட பகுதிகளில், நிகழாண்டு 4,240 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் மரவள்ளி பயிர் சாகுபடி செய்துள்ளனர்.

கடந்த ஜனவரியில் நடவுப் பணிகளை முடித்து, ஒரு சில விவசாயிகள் தற்போது அறுவடையை தொடங்கி பரவலாக நடைபெற்று வருகிறது. பருவமழை தொடங்கியுள்ளதால், மரவள்ளி விளைச்சல் முற்றிலும் பாதிக்கப்படும் என்பதால், அறுவடைப் பணியை விவசாயிகள் தீவிரப்படுத்தியுள்ளனர். ஒரு ஏக்கர் பரப்பளவில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்ய ரூ. 15 ஆயிரத்திலிருந்து ரூ. 20 ஆயிரம் வரை செலவிடப்படுகிறது. கடந்த ஆண்டு 80 கிலோ மூட்டை ஒன்று ரூ. 300 முதல் ரூ. 500 வரை மிகக் குறைந்த விலையில் விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். இதனால் பெரும்பாலான விவசாயிகள் நஷ்டத்தால் வேதனையடைந்தனர். தற்போது பெய்த வடகிழக்குப் பருவமழையாலும், பலத்த காற்றினாலும் பெரும்பாலான வயல்களில் மரவள்ளிக் கிழங்கு செடிகள் உடைந்து சேதமடைந்துள்ளன.

இந்நிலையில், அறுவடை செய்யப்பட்ட மரவள்ளிக் கிழங்குகளை விற்பனை செய்யும் விவசாயிகளிடம் 80 கிலோ மூட்டை ஒன்று ரூ. 100 முதல் ரூ. 120-க்கு கொள்முதல் செய்கின்றனர். இதனால், மரவள்ளிக் கிழங்கு சாகுபடியாளர்களுக்கு 40 சதவீதம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறியது:

ஆண்டுதோறும் அறுவடை செய்யப்படும் மரவள்ளிக் கிழங்குகள் சேலம், ஆத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள ஆலைகளுக்கு வியாபாரிகள் வாங்கி அனுப்பி வருகின்றனர். மரவள்ளிக் கிழங்கு பயிரிட பன்மடங்கு செலவினங்கள் அதிகரித்துள்ள நிலையில் தற்போது, மிக குறைந்த விலைக்கே கொள்முதல் செய்யப்படுகிறது.

பருவமழை தொடர்வதால், நிலத்திலும் கிழங்கை விட்டுவைக்க முடியாது. ஒரு சில நிலத்தில் கிழங்குகள் அழுகி வீணாகி வருகிறது என்பதால், பல மடங்கு குறைந்த விலைக்கு, நஷ்டத்துக்கு கட்டாயமாக விற்க வேண்டிய நிலை உள்ளது என்றனர்.

இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறியது: சேலம், ஆத்தூர் ஆலைகளில் மரவள்ளிக் கிழங்குகள் வாங்கப்பட்டு அரைவை செய்து ஸ்டார்ச் மாவு

தயாரிக்கின்றனர். இந்த மூலப்பொருளை வைத்து ஜவ்வரிசி, ரொட்டி, பிஸ்கெட் உள்ளிட்ட இதர உணவுப் பொருள்களை தயாரிக்கின்றனர்.

ஆலையில் கிழங்கை அரைவை செய்து திறந்தவெளி களங்களில் உலர்த்த வேண்டும். ஆனால், மழைக்காலங்களில் இந்தப் பணி தடைபடுவதால் பெரும்பாலான ஆலைகள் இயங்குவதில்லை. மழை பெய்தால் மரவள்ளி விலை குறைவது வழக்கம். தொடர் மழையின் காரணமாக மரவள்ளி கிழங்கின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்றார் அவர்.

### நவ. 26-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நவ. 26-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது என்று ஆட்சியர் எம். மதிவாணன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தொடர்புடைய அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்றகவுள்ளனர். எனவே, முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று, நிறை குறைகளைத் தெரிவித்து பயன்பெறலாம்.

தினகரன்

**மேட்டூர் நீர்மட்டம் 86 அடியாக உயர்வு**




மேட்டூர் : மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 7,271 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு 7,209 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 500 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. இதேபோல், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு நேற்று முன்தினம் மாலை முதல் வினாடிக்கு 300 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர்திறப்பை விட வரத்து அதிகளவில் உள்ளதால், அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று 85.68 அடியாக இருந்த நீர்மட்டம், இன்று 86.18 அடியாக உயர்ந்தது. நீர்இருப்பு 48.39 டிஎம்சி. ஒகேனக்கலில் தொடர்மழை உள்ளிட்ட காரணங்களால் அருவியில் குளிக்க, பரிசல் இயக்க விதிக்கப்பட்ட தடை 15வது நாளாக நீடிக்கிறது.

**சபரிமலையில் கனமழை பம்பை ஆற்றில் வெள்ளப்பெருக்கு**

கம்பம் : சபரிமலையில் பெய்து வரும் கனமழையால் பம்பை ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஆற்றில், சிக்கி 3 பேர் காயமடைந்தனர். 2 பேர்

மாயமானார்கள். கார்த்திகை சீசன் துவங்கியதை முன்னிட்டு சபரிமலைக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர். மலைக்கு செல்லும் பக்தர்கள் பம்பை நதியில் பக்தர்கள் புனித நீராடுவார்கள். கடந்த சில நாட்களாக சபரிமலை பகுதியில் மழை பெய்து வருகிறது. மழை தொடர்ந்ததால் நேற்று முன்தினம் பம்பை, திரிவேணிசங்கமம் பகுதிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் பம்பையில் குளிக்க பக்தர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பார்க்கிங் பகுதிகளை வெள்ளநீர் சூழ்ந்ததால் 200க்கும் மேற்பட்ட வாகனங்கள் மூழ்கின. சபரிமலை அருகே திடீர் மண் சரிவும் ஏற்பட்டது. இதில், திருவனந்தபுரத்தைச் சேர்ந்த ரிதீஷ் (45), வண்டிப்பெரியாறை சேர்ந்த பிரதீப் (40) மற்றும் கோட்டயத்தைச் சேர்ந்த குமார் ஆகியோர் மண்சரிவில் சிக்கி காயமடைந்தனர். அதிவிரைவுப்படை மற்றும் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர், தீயணைப்புத் துறையினர் இவர்களை மீட்டு, அருகில் உள்ள சிகிச்சை மையங்களுக்கு அனுப்பி வைத்தனர். மேலும் 2 பேர் மாயமானதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. அவர்களது விபரம் தெரியவில்லை. நேற்று முன்தினம் இரவு முதல் விடிய, விடிய பார்க்கிங் பகுதிகளில் மூழ்கிய வாகனங்களை மீட்கும் பணி நடந்தது. பெரும்பாலான வாகனங்கள் மீட்கப்பட்டன. ஒரு கார் மட்டும் அடித்து செல்லப்பட்டது.

பம்பையில் இருந்து ஐயப்பன் கோயிலுக்கு செல்லும் மலைப்பாதையில் பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டு, பாறைகள் உருண்டு விழுந்து கொண்டிருக்கின்றன. இதனால் மலை ஏறவும், சன்னிதானத்தில் இருந்து பம்பைக்கு இறங்கவும் பக்தர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் பாதுகாப்பாக ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். பம்பை செல்ல எந்த வாகனமும் அனுமதிக்கப்படவில்லை. உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீட்புக்குழுவினர் முகாமிட்டு, தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**செம்பரம்பாக்கம், பிச்சாட்டூர் ஏரியில் இருந்து 5 ஆயிரம் கனஅடி நீர் திறப்பு**



சென்னை: திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்த பலத்த மழையின் காரணமாக, செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து மீண்டும் 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், அடையாறு கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதேபோல பிச்சாட்டூர் ஏரியில் இருந்தும் 5 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளது. சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை பெய்து வருவதால், பூந்தமல்லி அடுத்துள்ள செம்பரம்பாக்கம் ஏரியில் நீர் மட்டம் 23 அடியை எட்டியது. இதையடுத்து, கடந்த 2 தினங்களுக்கு முன்பு ஏரியில் இருந்து 500 கன அடி நீர் திறக்கப்பட்டது. பின்னர், படிப்படியாக அது உயர்த்தப்பட்டு 7 மதகுகள் வழியாக 18 ஆயிரம் கன அடி நீர் திறந்து விடப்பட்டது. இதனால், அடையாறு கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாயம் விடுக்கப்பட்டது. பின்னர், மழை பெய்வது குறைந்ததை தொடர்ந்து ஏரியில் இருந்து வெளியேற்றும் நீரின் அளவும் படிப்படியாக குறைக்கப்பட்டது. குறிப்பாக, நேற்று முன்தினம் திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு 700 கன அடியாக குறைக்கப்பட்டது. இந்த நிலையில், நேற்று மீண்டும் சென்னை புறநகர் பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதனால், ஏரிக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்தது. இதனால், நேற்று இரவு செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து 5 ஆயிரம் கன அடியாக நீர் திறக்கப்பட்டது. இதைதொடர்ந்து, அடையாறு

கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டது. பிச்சாட்டூர் ஏரி திறப்பு: ஆந்திரா மாநிலம் பிச்சாட்டூர் ஏரி மற்றும் அதன் சுற்றி யுள்ள பகுதிகளில் நேற்று கனமழை பெய்தது. இதனால், ஏரியிலிருந்து விசாடிக்கு 5 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டது. இதனால், ஆரணி ஆற்றில் நீர் வரத்து அதிகரித்து காணப்பட்டது. எனவே, பழவேற்காடு உள்ளிட்ட கரையோர மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி அறிவுறுத்தப்பட்டனர்.

**தென் மாவட்டத்தில் கனமழை பெய்யும்**



சென்னை : வட கிழக்கு பருவமழை கடந்த வாரம் தீவிரம் அடைந்ததை அடுத்து தென் மேற்கு வங்கக் கடலில் ஒரு தீவிர காற்றழுத்தம் உருவாகி தமிழகத்தில் அனேக இடங்களில் கனமழை பெய்தது. இந்நிலையில் வளி மண்டல மேல் அடுக்கில் நீடிக்கும் காற்று சுழற்சியால் தென் மாவட்டத்தில் சில இடங்களில் மழை பெய்தது. இந்நிலையில், வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்டுள்ள காற்று சுழற்சி தென் மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலை கொண்டு இருப்பதால் தமிழக கடலோரப்பகுதியில் மழை பெய்யும். இலங்கை அருகே நிலை கொண்டுள்ள காற்று சுழற்சியால் குமரிக்கடல் பகுதியை ஒட்டிய தென் மாவட்டங்களின் இன்றும் கனமழை பெய்யும். தமிழகத்தின் உள்மாவட்டங்களை பொருத்தவரை சில இடங்களில் கனமழை பெய்யும். அரபிக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தம் காரணமாக வங்கக் கடல் பகுதியில் நிலவும் ஈரப் பதமுள்ள காற்றை அது ஈர்க்கும் என்பதால் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களிலும் கனமழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்யும்.

**நெற்பயிர்களை நோய் தாக்கும் அபாயம்: கட்டுப்படுத்துவது எப்படி?**

திருச்சி, : தமிழகம் முழுவதும் தற்போது பெய்த மழையினால் நெற்பயிர்களை நோய் தாக்கும் அபாயம் உள்ளது. அதனை எப்படி கட்டுபடுத்துவது குறித்து வேளாண் துறை விளக்கம் அளித்துள்ளது. தமிழகம் முழுவதும் தற்போது பெய்த மழையினால், திருச்சி மாவட்டத்தில் அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படும் சன்னரக நெல் ரகங்களான பிடி 5204 மற்றும் வெள்ளை பொன்னியில் இலை கருகல் நோய் அதிக அளவில் தாக்க கூடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்நோய் பெரும்பாலும் கதிர் வெளிவரும் நேரத்தில் அதிகமாக தென்படும். ஆனால், சாதகமான தட்பவெப்ப நிலையில் இளம் பயிரையும் தாக்கும். நோய் தாக்கிய இளம் பயிர் நடவு செய்த 2 வாரங்களில் வாடி இறந்து விடும். பாக்டீரியா மூலம் தாக்கப்படும் இந்நோயானது பயிரின் இலைகளில் காற்றினால் ஏற்படும் இலை காயங்கள் மூலமாக பயிர் முழுவதும் ஊடுறுவி பரவக்கூடியதாகும். இலையின் ஓரப்பகுதிகள் நுனியில் இருந்து கீழ்நோக்கி பழுப்பு அல்லது மஞ்சள் நிறமாக மாறி பின்னர் இலையின் ஓரங்கள் வைக்கோல் நிறமாக மாறி காயும். காய்ந்த பாகத்தின் உட்பகுதி அலைகள் போன்று வளைந்து காணப்படும்.

சில நேரங்களில் மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறக்கோடுகள் இலையின் நடுபாகத்தில் நடுநரம்புக்கு இணையாக இருபுறமும் தோன்றும். நாளடைவில் இந்த கோடுகள் விரிவடைந்து இலையின் பெரும் பகுதி பாதிக்கப்படும். நோயின் தீவிரம் அதிகமாகும் போது இலைகள் முழுவதும் கருகி சருகாக பயிர் காய்ந்து விடும். இலை நோயை கட்டுப்படுத்துவது எப்படி? என திருச்சி வேளாண் துறை இணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்திருப்பதாவது: பனி மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 முதல் 26 டிகிரி செல்சியஸ் போன்றவை நோய் வேகமாக பரவ உகந்த சூழ்நிலையாகும். மேலுரத்தில் தழைசத்து மிகுதியாகவும், சாம்பல் சத்து உரங்களை குறைவாக இடும்பொழுது நோயின் வீரியம் அதிகரிக்கும். எனவே நெற் பயிருக்கு பரிந்துரை செய்யப்பட்ட தழைசத் தினை மட்டும் பயிரின் வளர்ச்சி நிலைகளில் 3 முறையாக பிரித்து இட வேண்டும். ஒவ்வொரு முறையும் தழைசத்து உரமான யூரியாவுடன் 5 பங்கிற்கு ஒரு பங்கு வேப்பம் புண்ணாக்கு, பரிந்துரை செய்யப்படும் பொட்டாஷ்

உரத்தையும் கலந்து இட வேண்டும். நோயினால் தாக்கப்பட்ட பயிரை அறுவடை செய்த பின்னர் மிஞ்சியிருக்கும் தூர் கட்டை மற்றும் இதர பகுதிகளை அழித்துவிட வேண்டும். நோய் தாக்கிய வயலில் அதிகமாக நீர் தேக்கி வைக்க கூடாது. மழைக்கு பின்னர் வயலில் தேங்கும் அதிகப்படியான நீரை வடித்து விட வேண்டும். நோய் தாக்கிய பசுஞ்சாணக் கரைசல் தயார் செய்து தெளிக்கலாம். இக்கரைசலை தயார் செய்ய ஒரு லிட்டர் நீரில் 20 கிராம் பசுமாட்டு சாணத்தை கரைத்து வட்டிகட்டி பின்னர் தெளிக்க வேண்டும். இக்கரைசலை 15 நாட்கள் இடைவெளியில் 2ம் முறையாக தெளிக்க வேண்டும். நோய் தாக்குதல் அதிகமாக தென்பட்டால் ஏக்கருக்கு 18 கிராம் ஸ்டிரெப்டோசைக்கிளின் அல்லது 120 கிராம் ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் டெட்ரோ சைக்கிளின் ஹைட்ரோகுளோரைடு கலந்த கலவையுடன் 500 கிராம் காப்பர் ஆக்ஸி குளோரைடு 200 லி. நீரில் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் 2 முறை இக்கரைசலை தெளித்து பாக்டீரியல் இலை கருகல் நோயை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## மழை, பனியால் தக்காளி விளைச்சல் குறைவு_: உள்ளூர் சந்தையில் கிலோ ரூ.60-க்கு விற்பனை



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர், தேன்கனிக்கோட்டை, கெலமங் கலம், ராயக்கோட்டை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தக்காளி

அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி யாகும் தக்காளி, ராயக்கோட்டை மற்றும் ஓசூர் சந்தைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து ஆந்தி ரம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழகத்தின் அனைத்து மாவட்டங் களுக்கும் அனுப்பிவைக்கப்படுகி றது.

ராயக்கோட்டை தக்காளி மண்டி யில் இருந்து மட்டும் நாள் ஒன்றுக்கு 200-க்கும் மேற்பட்ட மினிலாரி உள்ளிட்ட வாகனங்களில் 6 ஆயிரம் முதல் 10 ஆயிரம் கூடை (ஒரு கூடையில் 25 கிலோ) தக்காளி ஏற்றுமதியாகும்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு தக்காளிக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்ட மடைந்து வந்தனர். இதனால் தக் காளியை பறிக்காமலும், கால்நடை களுக்கு உணவாகவும் விட்டுவிட் டனர். இந்நிலையில் திருவிழாக்கள், திருமணம் உள்ளிட்ட சுபநிகழ்ச்சிகள் தொடர்ந்து வந்ததால் தக்காளி விலை உயரத் தொடங்கியது.

தற்போது தொடர் மழை மற்றும் பனியின் காரணமாக தக்காளி விளைச்சல் குறைந்து விலை மேலும் உயர்ந்துள்ளது. ராயக் கோட்டை சந்தைக்கு தக்காளி வரத்து வெகுவாக குறைந்து விலை உயர்ந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி ஒரு கூடை தக்காளி ரூ.1150 முதல் ரூ.1250 வரை விற்பனையானது. மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பு ஒரு கூடை ரூ.600 வரை விற்பனையானது.

இதுகுறித்து ராயக்கோட்டை தக்காளி வியாபாரி சீனிவாசன் கூறும்போது, மழையாலும், நோய் தாக்குதலாலும் தக்காளி விளைச் சல் குறைந்துள்ளது. சந்தைக்கு 750 முதல் 1000 கூடைகள் வரை மட்டுமே தக்காளி வரத்து உள்ளது. இதனால் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. ஓசூர் மார்க்கெட்டில் கிலோ ரூ.46 முதல் ரூ.50 வரையும், சில்லரை விற்பனையில் ரூ.60 முதல் ரூ.80 வரையும் தக்காளி விற்பனையாகிறது என்றார்.

தமிழக விவசாயிகள் சங்க ஒன்றிய பொறுப்பாளர் சிவப் பிரகாஷ் கூறும்போது, 'மழை, கடும் பனிப்பொழிவு மற்றும் குளிர்ந்த காற்று காரணமாக நோய் பரவி தக்காளி உற்பத்தி குறைந்து விட்டது. தொடர்ந்து குளிர்காலம் என்பதால் தக்காளி விலை உயர்வு நீடிக்கும். தக்காளி விலை உயர்ந் தாலும், குறைந்தாலும் விவசாயி களுக்கு போதிய லாபம் கிடைப் பதில்லை. விலை ஏற்றத் தாழ்வு களை சமாளிக்க ராயக்கோட்டை யில் குளிர்பதன கிடங்கு

அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும். தக்காளி மட்டுமல்லாமல் இங்கு சாகுபடி செய்யப்படும் கத்தரிக்காய், கேரட், பீன்ஸ், முட்டை கோஸ் உள்ளிட்ட காய்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளது’ என் றார்._

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**நீர்வள அமைச்சகத்தின் நதிகள் இணைப்பு திட்ட அறிக்கைக்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல்**



நாட்டில் உள்ள நதிகள் அனைத்தையும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் இணைக்க வேண்டும், நதிகள் இணைப்பு தொடர்பாக திட்டம் தீட்டி செயல்படுத்துவதற்கு உயர்மட்டக் குழுவை அமைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு கடந்த 2012-ம் ஆண்டு, பிப்ரவரி 27-ந்தேதி தீர்ப்பு அளித்தது. அப்போதைய தலைமை நீதிபதி எஸ்.எச்.கபாடியா தலைமையிலான அமர்வு இந்த தீர்ப்பினை வழங்கியது.இந்த உயர் மட்டக்குழுவில், மத்திய நீர்வளத்துறை மந்திரி, அந்த துறைக்கான செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலாளர், நீர்வளத்துறை அமைச்சகம், நிதித்துறை அமைச்சகம், திட்ட கமிஷன், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் நியமிக்கும் 4

நிபுணர்கள் இடம் பெற வேண்டும் என தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் உயர் மட்டக்குழுவில் தமிழ்நாடு, ஆந்திரா, குஜராத், கர்நாடகம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட 12 மாநிலங்களை சேர்ந்த விவசாயம், நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை மந்திரிகளும், முதன்மை செயலாளர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.இதன்படி, மத்திய அரசு உயர் மட்டக்குழுவை அமைத்துள்ளது.

இந்த உயர்மட்டக்குழு, மத்திய நீர்வளத்துறை மந்திரி உமாபாரதி தலைமையில், கூடி, நதிநீர் இணைப்பு குறித்து விவாதிக்க வேண்டும். இதில் விவாதிக்கக்கூடிய விஷயங்கள் குறித்து, பதிவு செய்து பராமரித்து வர வேண்டும்.

நதிகள் இணைப்பு திட்டத்தை அமல்படுத்துவது பற்றியும், அது தொடர்பான விதிமுறைகளை வகுப்பது குறித்தும் விவாதித்து மத்திய அரசுக்கு அறிக்கை தர வேண்டும்.

இந்த நிலையில், நதிகள் இணைப்பு தொடர்பான மத்திய நீர்வளத்துறை அமைச்சகத்தின் நிலவரம், முன்னேற்ற அறிக்கைக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கூடிய மத்திய மந்திரிசபை ஒப்புதல் வழங்கியது. இந்த அறிக்கை 6 மாதங்களுக்கு ஒரு முறை மத்திய மந்திரிசபையின் தகவலுக்காக அளிக்கப்படும்.

இது தேசிய நதிநீர் இணைப்பு திட்டத்தை கண்காணிப்பதற்கு உதவும். மேலும் இந்த அறிக்கை, நாட்டு நலனையொட்டி நதிகள் இணைப்பு திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்கு ஏற்ற வகையில், திட்டம் தொடர்பாக இறுதி முடிவுகளை எடுப்பதை உறுதி செய்யும்.

## கொடைக்கானலில் பலத்த மழை: பள்ளிகளுக்கு விடுமுறை




கொடைக்கானல், நவ. 20–

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளது. அரபிக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் நேற்று முன்தினம் முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

கொடைக்கானலில் 2 தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று இரவு விடிய விடிய மழை பெய்தது. அங்கு 44.6 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதனால் பல்வேறு இடங்களில் சாலையோரம் லேசான மண் சரிவு ஏற்பட்டது.

செண்பகனூர், பூலத்தூர் பகுதியில் மரம் சாய்ந்து விழுந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. நெடுஞ்சாலைத் துறையினர் அவற்றை துரிதகதியில் அப்புறப்படுத்தினர். இதையடுத்து போக்குவரத்து சீரானது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கொடைக்கானல் தாலுகாவில் இன்று பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளித்து கலெக்டர் ஹரிஹரன் உத்தரவிட்டுள்ளார். சுற்றுலா பயணிகள் வருகை மிகவும் குறைந்து விட்டது. அவர்களும் விடுதிகளிலேயே முடங்கியுள்ளனர்.

மாவட்டத்தின் பிற இடங்களில் லேசான சாரல் மழையே பெய்து வருகிறது.

தொடர் மழையால் திண்டுக்கல் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள காய்கறிகள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. பிஞ்சுகள் உதிர்ந்து விடுகின்றன. மேலும் காய்கறிகளில் அழுகல் நோயும் தாக்கியுள்ளது. இதனால்

ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டுக்கு காய்கறி வரத்து குறைந்துள்ளது. எனவே அவற்றின் விலையும் அதிகரித்துள்ளது.

முருங்கைக்காய் கிலோ ரூ.75, பீன்ஸ் ரூ.110, வெண்டைக்காய் ரூ.45, கத்தரிக்காய் ரூ.56, அவரை ரூ.80, கேரட் ரூ.35, வெங்காயம் ரூ.45, பல்லாரி ரூ.55, தக்காளி ரூ.40.

**தர்மபுரியில் விடிய–விடிய மழை: பள்ளிகளுக்கு விடுமுறை**



தர்மபுரி, நவ. 20–

தர்மபுரி மாவட்டம் முழுவதும் நேற்று இரவு விடிய–விடிய சாரல் மழை பெய்தது. இன்று காலையும் மழை பெய்ததால் இன்று பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த தகவலை மாவட்ட கலெக்டர் விவேகானந்தன் தெரிவித்துள்ளார்.

தர்மபுரி மாவட்டங்களில் மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

தர்மபுரி கலெக்டர் அலுவலகம் –10.00

தர்மபுரி சிட்டி–4.00

பாப்பிரெட்டிப்பட்டி–20.07


அரூர் – 18.03

மாரண்டஅள்ளி – 02.00

பாலக்கோடு – 01.00

பென்னாகரம் – 01.00

## நாமக்கல்லில் தினசரி முட்டை உற்பத்தி 3 கோடியாக குறைந்தது: 2½ ஆண்டுகளில் 50 லட்சம் சரிவு



நாமக்கல், நவ.20-

நாமக்கல் மண்டலத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயத்திற்கு மாற்றாக தொடங்கப்பட்டது கோழிப்பண்ணை தொழில். தொடக்கத்தில் ஆயிரம் முதல் 5 ஆயிரம் கோழிகளை வைத்து பண்ணைகளை இப்பகுதியை சேர்ந்தவர்கள் நடத்தி வந்தனர். பின்னர் படிப்படியாக கோழிப்பண்ணை தொழில் இங்கு வளர தொடங்கியது.தற்போது கோழிப்பண்ணை தொழிலுக்கு இந்தியாவிலேயே முன்னோடி மாவட்டமாக நாமக்கல் மாவட்டம் திகழ்ந்து வருகிறது. இந்திய அளவில் ஐதராபாத் மண்டலத்தில் அதிகப்படியான முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அதற்கு அடுத்தபடியாக நாமக்கல் மண்டலத்தில்தான் முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இருப்பினும் ஏற்றுமதியை எடுத்துக்கொண்டால், இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் முட்டைகளில் 80 சதவீதம் வரை இங்கிருந்து தான் ஏற்றுமதியாகின்றன.

தற்போது நாமக்கல் மண்டலத்தில் 5 கோடி முட்டையின கோழிகள்

வளர்க்கப்படுகின்றன. இவற்றின் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 3 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றில் கேரளாவுக்கு 1 கோடி முட்டைகளும், தமிழக அரசின் சத்துணவு திட்டத்திற்கு 50 லட்சம் முட்டைகளும், 10 முதல் 15 லட்சம் முட்டைகள் வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. மீதமுள்ள முட்டைகள் தமிழகம் மற்றும் வடமாநிலங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.நாமக்கல் மண்டலத்தில் கடந்த 2011-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் முறையாக முட்டை உற்பத்தி 3 கோடியை தொட்டது. அது 'கிடுகிடு' என உயர்ந்து, 2012-ம் ஆண்டு செப்டம்பர் மாதமே 3½ கோடியை தாண்டியது. இது 2013-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை மட்டுமே நீடித்தது. அதன்பிறகு படிப்படியாக முட்டை உற்பத்தி குறையத் தொடங்கியது. ஒவ்வொரு மாதமும் 2 லட்சம் முதல் 3 லட்சம் வரை சராசரியாக குறைந்து வந்த முட்டை உற்பத்தி கடந்த மாதம் 3 கோடியாக சரிவடைந்துள்ளது. கடந்த 2½ ஆண்டுகளில் முட்டை உற்பத்தி நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 50 லட்சம் வரை குறைந்து உள்ளது. தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின் அடிப்படையில் கடந்த மாதம் (அக்டோபர்) நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.3 கோடியே 49 ஆயிரம் முட்டைகள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது.தொடர்ந்து முட்டை உற்பத்தி சரிவடைந்து வருவதற்கு தொழிலில் நஷ்டம் காரணமாக குஞ்சு விடுவதை பண்ணையாளர்கள் குறைத்து வந்ததே முக்கிய காரணம் என கூறப்படுகிறது.

இது குறித்து தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர் சங்க தலைவர் நல்லதம்பி கூறியதாவது:- கடந்த சில ஆண்டுகளாக கோழித்தீவன மூலப்பொருட்களின் விலை 'கிடுகிடு' என உயர்ந்து வருகிறது. அதற்கு தகுந்தாற்போல் முட்டையின் விலை உயரவில்லை. எனவே கடந்த ஜூலை மாதம் முதல் பண்ணையாளர்களுக்கு ஒரு முட்டைக்கு 40 முதல் 45 காசுகள் வரை இழப்பு ஏற்பட்டு வருகிறது. ஒரு லட்சம் கோழிகள் வைத்துள்ள ஒரு பண்ணையாளருக்கு ஒரு ஆண்டுக்கு சுமார் ரூ.50 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. எனவே பெரும்பாலான பண்ணையாளர்கள் குஞ்சு விடுவதை குறைத்துக்கொண்டே வருகின்றனர். எனவேதான் முட்டை உற்பத்தியும்

குறைந்துகொண்டே வருகிறது. மேலும் தற்போது பஞ்சாப் போன்ற வடமாநிலங்களிலும் முட்டை உற்பத்தியை தொடங்கி விட்டனர். அவர்களுக்கு அங்கேயே மூலப் பொருட்கள் கிடைப்பதால் அவர்களால் தமிழகத்தை காட்டிலும் 50 காசுகள் வரை குறைவாக முட்டை உற்பத்தி செய்ய முடிகிறது. இது முட்டை விலை உயராமல் இருப்பதற்கு முக்கிய காரணம் ஆகும்.

இவ்வாறு அவர் கூறினார்.இதுஒருபுறம் இருக்க நாமக்கல் மண்டலத்தில் இருந்து கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு வளைகுடா நாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு 50 லட்சம் வரை முட்டைகள் அனுப்பப்பட்டு வந்தன. வட மாநிலங்களில் அவ்வப்போது வந்து செல்லும் பறவைக் காய்ச்சல் நோய் காரணமாக வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி செய்வதில் சிக்கல் நீடித்து வருகிறது. தற்போது கூட வளைகுடா நாடுகளை தவிர்த்து ஆப்பிரிக்கா, உகாண்டா போன்ற நாடுகளுக்குதான் முட்டைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. வளைகுடா நாடுகளுக்கு மிக குறைவான முட்டைகளே அனுப்பப்படுகின்றன. இதுவும் கோழிப்பண்ணைத் தொழில் தொடர்ந்து வீழ்ச்சியை கண்டு வருவதற்கு ஒரு காரணம் என பண்ணையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நாமக்கல் மண்டலத்தில் அபரீத வளர்ச்சியை கண்டு வந்த கோழிப்பண்ணைத் தொழில் நாளுக்குநாள் வீழ்ச்சி அடைந்து வருவதால், பண்ணையாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

## தொடர் மழையால் வைகை அணை நீர்மட்டம் 60 அடியாக உயர்வு



ஆண்டிப்பட்டி, நவ.20–

தேனி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. அரபிக்கடலில் ஏற்பட்டுள்ள புதிய காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

பெரியாறு அணை நீர்மட்டம் 133.10 அடியாக உயர்ந்துள்ளது. 4567 கன அடி தண்ணீர் வருகிறது. 511 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இந்த தண்ணீருடன் மூல வைகை ஆற்றில் இருந்தும் அதிக அளவு தண்ணீர் வருவதால் வைகை அணைக்கு நீர்வரத்து 6102 கன அடியாக அதிகரித்துள்ளது. எனவே அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. தற்போது 60.43 அடி தண்ணீர் உள்ளது. 60 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

மஞ்சளாறு மற்றும் சோத்துப்பாறை அணைகள் ஏற்கனவே நிரம்பி விட்டதால் அந்த அணைகளுக்கு வரும் தண்ணீர் முழுவதும் அப்படியே வெளியேற்றப்படுகிறது.

**குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை; தமிழ்நாட்டில் இன்று மழை பெய்யும்: ரமணன்**



**சென்னை:** லட்சத்தீவு அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவான காரணத்தால் தமிழ்நாட்டில் அநேக இடங்களில் மழை பெய்யும். ஊட்டி, கோவை, வால்பாறை, தேனி, மேற்கு தொடர்ச்சி பகுதிகளில் கனமழை பெய்யும் என்றும் ரமணன் கூறி உள்ளார்.தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன் வட மாவட்டங்களில் தொடர் கனமழை பெய்தது. இதன் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள வீடுகளை சூழ்ந்த மழை நீர் இன்னும் முற்றிலுமாக வடியவில்லை.

இந்நிலையில் சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் ரமணன் கூறும்போது, "வங்கக்கடலில் தெற்கு ஆந்திராவையொட்டி நிலவி வந்த தாழ்வு நிலை மறைந்துவிட்டது. உள் மாவட்டங்களில் நிலவிய மேலடுக்கு சுழற்சி மேற்கு நோக்கி நகர்ந்து லட்சத்தீவு பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறி நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது.

இன்று (வெள்ளிக்கிழமை) தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அநேக இடங்களில் மழை பெய்யும். மேற்கு தொடர்ச்சி மலையை யொட்டியப்பகுதிகளில் கனமழை பெய்யும். கோவை, ஊட்டி, வால்பாறை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் கன

மழையை எதிர்பார்க்கலாம். தமிழ்நாடு முழுக்க மழை பெய்யவேண்டுமென்றால் வங்கக்கடலில் இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வேண்டும்.

தற்போது லட்சத்தீவில் உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அரபிக்கடலில் உள்ளது. அரபிக்கடலில் இந்த நிகழ்வு இருந்த போதிலும் வங்கக்கடலில் உள்ள ஈரக்காற்றை தமிழகம் ஊடாக உள்வாங்கும். அதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்ய வேண்டிய மழை 44 செ.மீ. இதுவரை 39.3 செ.மீ.மழை பெய்துவிட்டது. இந்த வருடம் சராசரியாக பெய்யக்கூடிய மழையைவிட சற்று கூடுதலாக பெய்ய வாய்ப்பு உள்ளது" என்றார்.

## நீர்வள அமைச்சகத்தின் நதிகள் இணைப்பு திட்ட அறிக்கைக்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல்



புதுடெல்லி

நீர்வள அமைச்சகத்தின் நதிகள் இணைப்பு திட்ட அறிக்கைக்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் வழங்கியது.

<u>நதிகள் இணைப்பு திட்டம்</u>

நாட்டில் உள்ள நதிகள் அனைத்தையும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் இணைக்க வேண்டும், நதிகள் இணைப்பு தொடர்பாக திட்டம் தீட்டி செயல்படுத்துவதற்கு உயர்மட்டக் குழுவை அமைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு கடந்த 2012–ம் ஆண்டு, பிப்ரவரி 27–ந்தேதி தீர்ப்பு அளித்தது.

அப்போதைய தலைமை நீதிபதி எஸ்.எச்.கபாடியா தலைமையிலான அமர்வு இந்த தீர்ப்பினை வழங்கியது.

<u>உயர்மட்டக்குழு</u>

இந்த உயர் மட்டக்குழுவில், மத்திய நீர்வளத்துறை மந்திரி, அந்த துறைக்கான செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலாளர், நீர்வளத்துறை அமைச்சகம், நிதித்துறை அமைச்சகம், திட்ட கமிஷன், சுற்றுச்சூழல் மற்றும்

வனத்துறை அமைச்சகம் நியமிக்கும் 4 நிபுணர்கள் இடம் பெற வேண்டும் என தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் உயர் மட்டக்குழுவில் தமிழ்நாடு, ஆந்திரா, குஜராத், கர்நாடகம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட 12 மாநிலங்களை சேர்ந்த விவசாயம், நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை மந்திரிகளும், முதன்மை செயலாளர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.இதன்படி, மத்திய அரசு உயர் மட்டக்குழுவை அமைத்துள்ளது.

குழு கூட்டம்

இந்த உயர்மட்டக்குழு, மத்திய நீர்வளத்துறை மந்திரி உமாபாரதி தலைமையில், கூடி, நதிநீர் இணைப்பு குறித்து விவாதிக்க வேண்டும். இதில் விவாதிக்கக்கூடிய விஷயங்கள் குறித்து, பதிவு செய்து பராமரித்து வர வேண்டும்.நதிகள் இணைப்பு திட்டத்தை அமல்படுத்துவது பற்றியும், அது தொடர்பான விதிமுறைகளை வகுப்பது குறித்தும் விவாதித்து மத்திய அரசுக்கு அறிக்கை தர வேண்டும்.

மத்திய மந்திரிசபை ஒப்புதல்

இந்த நிலையில், நதிகள் இணைப்பு தொடர்பான மத்திய நீர்வளத்துறை அமைச்சகத்தின் நிலவரம், முன்னேற்ற அறிக்கைக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கூடிய மத்திய மந்திரிசபை ஒப்புதல் வழங்கியது.

இந்த அறிக்கை 6 மாதங்களுக்கு ஒரு முறை மத்திய மந்திரிசபையின் தகவலுக்காக அளிக்கப்படும்.

இது தேசிய நதிநீர் இணைப்பு திட்டத்தை கண்காணிப்பதற்கு உதவும்.

மேலும் இந்த அறிக்கை, நாட்டு நலனையொட்டி நதிகள் இணைப்பு திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்கு ஏற்ற வகையில், திட்டம் தொடர்பாக இறுதி முடிவுகளை எடுப்பதை உறுதி செய்யும்.

## மழையால் பாதிக்கப்பட்ட அம்பத்தூர் ஆவின் பால்பண்ணையில் இன்று உற்பத்தி தொடக்கம்




சென்னை,

மழையால் பாதிக்கப்பட்ட அம்பத்தூரில் உள்ள ஆவின் பால் பண்ணையில் இன்று (வெள்ளிக்கிழமை) உற்பத்தி தொடங்குகிறது.

இதுகுறித்து ஆவின் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

<u>ஆவின் பால்பண்ணை</u>

ஆவின் நிறுவனம் சென்னை மாநகரில் அமைந்துள்ள மாதவரம், அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் பால்பண்ணைகள் மூலம் தினசரி 11.50 லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த தொடர் கனமழையின் காரணமாக அம்பத்தூர் பால்பண்ணையை மழைநீர் சூழ்ந்தது. எனவே, அம்பத்தூர் பால்பண்ணையின் செயல்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டது.

ஆவின் பால் நுகர்வோர்களுக்கு தடையில்லாமல் வழங்குவதற்காக ஆவின் நிர்வாகம் அம்பத்தூர் பால்பண்ணை மூலம் மத்திய சென்னைக்கு விநியோகம் செய்யும் 42 பால் வழித்தடங்களுக்கு மாதவரம், சோழிங்கநல்லூர், காக்கலூர் மற்றும் விழுப்புரம் பால்பண்ணைகளிலிருந்து இயக்கி நுகர்வோர்களுக்கு தடையின்றி பால் விநியோகம் செய்து வருகிறது. தொடர் மழை பெய்த நிலையிலும், சென்னை நகரின் அனைத்துப் பகுதி ஆவின் பால் நுகர்வோர்களுக்கும் ஆவின் பால் வழக்கம் போல் விநியோகிக்கப்பட்டது.

<u>இன்று உற்பத்தி தொடக்கம்</u>

இந்தநிலையில் முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் ஆணையின்படி, பால்வளத்துறை அமைச்சர் பி.வி. ரமணா, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்பத்தூரில் உள்ள பால்பண்ணையை சுற்றி பார்வையிட்டார்.

பின்னர் பால்பண்ணையின் உற்பத்தியை துவக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதனடிப்படையில் பால்பண்ணையின் உற்பத்தி இன்று (வெள்ளிக்கிழமை) முதல் தொடங்கப்பட்டு பால் விநியோகம் முறையாக நடைபெற உள்ளது.

<u>தங்குதடையின்றி வழங்கப்படும்</u>

நுகர்வோர் வசதிக்காக சென்னை நகரில் அமைந்துள்ள ஆவின் பாலகங்களில் ரொக்க விற்பனைக்கு பால் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் அதிக அளவில் மழைநீர் தேங்கி உள்ள காரணத்தால் ஆவின் பால் விநியோக வாகனங்கள் பால் டிப்போக்களுக்கு குறித்த நேரத்தில் சென்றடைவதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டது. நுகர்வோர்களுக்கு தங்கு தடையின்றி பால் கிடைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஆவின் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

ஆய்வின் போது அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.வேதாச்சலம், அரசு முதன்மைச்செயலாளர் மற்றும் வணிக வரித்துறை ஆணையர் எஸ்.கே. பிரபாகர், ஆவின் நிர்வாக இயக்குநர் சுனீல்பாலீவால் மற்றும் கைத்தறித்துறை இயக்குனர் கே. லதா ஆகியோர் உடனிருந்தனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**கனமழை காரணமாக உதகை, தருமபுரியில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிப்பு**



தருமபுரி,

கனமழை காரணமாக தருமபுரியில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் கனமழை காரணமாக பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கனமழை காரணமாக கொடைக்கானலில் மட்டும் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவித்து ஆட்சியர் உத்தரவிட்டார்.

கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. மழையினால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் சாலையில் ஆங்காங்கே மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. மீட்புபணிகளும் நடைபெற்று வருகிறது.

கனமழை காரணமாக உதகையிலும் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. கனமழை காரணமாக உதகை, குன்னூர், குந்தா மற்றும் கோத்தகிரியில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவித்து மாவட்ட ஆட்சியர்

உத்தரவிட்டார். கனமழை காரணமாக மலை ரெயில் சேவை பாதிக்கப்பட்டு உள்ளது. கனமழை காரணமாக கல்லூர் அருகே ரெயில் தண்டவாளத்தில் மண்சரிவு ஏற்பட்டு உள்ளது. இதனால் மேட்டுபாளையம் - உதகை இடையிலான மலை ரெயில் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு உள்ளது.

## லட்சத்தீவு அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தமிழ்நாட்டில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும்



சென்னை,

லட்சத்தீவு அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவான காரணத்தால் தமிழ்நாட்டில் அநேக இடங்களில் மழை பெய்யும். ஊட்டி, கோவை, வால்பாறை, தேனி, மேற்கு தொடர்ச்சி பகுதிகளில் கனமழை பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

**பருவமழை தீவிரம்**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு வட மாவட்டங்களில் மிக மிக கனமழை பெய்தது. இதன்காரணமாக வீடுகளை சூழ்ந்த மழை வெள்ளம் சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் முற்றிலும் வடியவில்லை. இந்த நிலையில் நேற்று காலை

சென்னை மற்றும் புறநகர் பகுதியான தாம்பரத்தில் லேசாக மழை தூறியது. இதனால் மழை வலுத்துவிடுமோ என்று சென்னை மற்றும் பாதிக்கப்பட்ட வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் நினைத்தனர். அவர்கள் நினைத்தபடி மழை வலுக்கவில்லை.

இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:-

**குறைந்த காற்றழுத்த தாழ்வுபகுதி**

வங்கக்கடலில் தெற்கு ஆந்திராவையொட்டி நிலவி வந்த தாழ்வு நிலை மறைந்து விட்டது. உள் மாவட்டங்களில் நிலவிய மேலடுக்கு சுழற்சி மேற்கு நோக்கி நகர்ந்து லட்சத்தீவு பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறி நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது. பதிவு செய்த மழையின் அடிப்படையில் அதிக பட்சமாக திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் 14 செ.மீ.மழை பெய்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் 13 செ.மீ.மழை பதிவாகி உள்ளது. இன்று(வெள்ளிக்கிழமை) தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அநேக இடங்களில் மழை பெய்யும். மேற்கு தொடர்ச்சி மலையை யொட்டியப்பகுதிகளில் கனமழை பெய்யும். கோவை, ஊட்டி, வால்பாறை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் கன மழையை எதிர்பார்க்கலாம்.

**மேற்கு தொடர்ச்சி மலை**

தமிழ்நாடு முழுக்க மழை பெய்யவேண்டுமென்றால் வங்கக்கடலில் இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வேண்டும். தற்போது லட்சத்தீவில் உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அரபிக்கடலில் உள்ளது. அரபிக்கடலில் இந்த நிகழ்வு இருந்த போதிலும் வங்கக்கடலில் உள்ள ஈரக்காற்றை தமிழகம் ஊடாக உள்வாங்கும். அதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்ய வேண்டிய மழை 44 செ.மீ. ஆனால் இதுவரை 39.3 செ.மீ.மழை பெய்துவிட்டது. இந்த வருடம் நீண்ட கால வானிலை அறிக்கைபடி சராசரியாக பெய்யக்கூடிய மழையைவிட சற்று கூடுதலாக பெய்ய வாய்ப்பு உள்ளது.இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

**மழை அளவு**

சங்கரன்கோவில் 14 செ.மீ., ராஜபாளையம் 13 செ.மீ., ராதாபுரம், பாளையங்கோட்டை, ஆயிக்குடி தலா 10 செ.மீ., உத்தமபாளையம், கூடலூர் தலா 9 செ.மீ., குளச்சல், பேச்சிப்பாறை, சிவகிரி, தென்காசி, ஸ்ரீவில்லிபுத்தூர் தலா 6 செ.மீ., நாகர்கோவில், மைலாடி, பேரையூர், வத்திராயிருப்பு, பூதப்பாண்டி, வாடிப்பட்டி தலா 5 செ.மீ., செங்கோட்டை, கன்னியாகுமரி, தக்கலை, வால்பாறை தலா 4 செ.மீ., போடிநாயக்கனூர், சிவகாசி, சாத்தான்குளம், மரக்காணம், திருவள்ளூர் தலா 3 செ.மீ., பூந்தமல்லி, கொடைக்கானல், பாபநாசம், குழித்துறை, வானூர், இரணியல், தூத்துக்குடி தலா 2 செ.மீ., ஸ்ரீவைகுண்டம் உள்பட 25 இடங்களில் தலா 1 செ.மீ.மழை பதிவாகி உள்ளது.

## தொடரும் கனமழையால் பூண்டி ஏரியில் இருந்து கூடுதல் தண்ணீர் திறப்பு 42 கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை



ஊத்துக்கோட்டை,

தொடரும் கனமழையால் பூண்டி ஏரியில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. இதனையடுத்து 42 கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கூடுதல் தண்ணீர் திறப்பு

சென்னை, காஞ்சீபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கடந்த வாரம் வெளுத்து வாங்கிய மழையால் பல பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. இன்னும் சில இடங்களில் மழைநீர் வடியாமல் உள்ளது.தொடர்மழை காரணமாக சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம் ஏரிகள் நிரம்பி விட்டன. ஏரிக்கு அதிக மழை நீர் வரத்தொடங்கியதால் பூண்டி ஏரியில் இருந்து குசஸ்தலை ஆற்றில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு வினாடிக்கு 18 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. நீர்வரத்து குறைந்ததால் நேற்று முன்தினம் தண்ணீர் திறப்பு 500 கன அடியாக குறைக்கப்பட்டது. ஆனால் நேற்றுமுன்தினம் இரவு முதல் பூண்டி நீர்த்தேக்கப்பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. இதையடுத்து ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்தது. எனவே நேற்று காலை 4 ஷட்டர்கள் மூலம் 5,212 கனஅடி உபரி நீர் திறந்து விடப்பட்டது.

வெள்ள அபாயம்

மேலும் சென்னை பகுதி குடிநீருக்காக இணைப்பு கால்வாய் மூலம் 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கூடுதல் தண்ணீர் திறந்து விடப்படுவதால் குசஸ்தலை ஆற்றின் கரையோரம் உள்ள ஒதப்பை, ஆற்றம்பாக்கம், மோவூர் உள்ளிட்ட 42 கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. நேற்று காலை நிலவரப்படி ஏரிக்கு வினாடிக்கு 5,212 கனஅடி தண்ணீர் வருகிறது. ஏரியில் 32.78 அடி நீர் மட்டம் பதிவானது. இதற்கிடையே ஊத்துக்கோட்டையில் நேற்று மதியம் மீண்டும் பலத்த மழை பெய்தது. மாலை வரை நீடித்த இந்த மழையால் சாலைகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால், வாகனங்கள் ஊர்ந்து சென்றன. கடந்த 4 நாட்களுக்கு முன் பெய்த மழைக்கு ஊத்துக்கோட்டை பகுதி

வெள்ளக்காடாக காட்சி அளித்தது. மழை நீர் வடிந்து வெயில் தலை காட்டிய நேரத்தில் நேற்று மீண்டும் பலத்த மழை கொட்டித் தீர்த்தது.

## பருப்புகள் மற்றும் எண்ணெய் வித்துகளின் உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு திட்டம்



மும்பை,

பருப்பு மற்றும் எண்ணெய் வித்துகளின் உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

விலை உயர்வு

நாடு முழுவதும் பருப்பு விலை வரலாறு காணாத அளவிற்கு கடுமையாக உயர்ந்துள்ளது. பா.ஜனதா கட்சி இந்த விலை உயர்வால் கடும் விமர்சனங்களுக்கு ஆளாக நேரிட்டது.

இதற்கு சட்டவிரோத பதுக்கல் மற்றும் பருப்பு உற்பத்தி பெருமளவு குறைந்ததுமே முக்கியமான காரணமாக கூறப்படுகிறது. இந்த நிலையில் விவசாயிகளை ஊக்கப்படுத்தி பருப்பு உற்பத்தியை அதிகரிக்க பிரதமர் நரேந்திர மோடி புதிய திட்டம் வகுத்துள்ளார். இதை நடைமுறை படுத்துவதற்காக வரும் 24, 25–ந் தேதிகளில் அனைத்துமாநில விவசாயத்துறை மந்திரிகளுடன் ஆலோசனை கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மராட்டிய மந்திரி

இதுகுறித்து விவசாயத்துறை மந்திரி ஏக்நாத் கட்சே கூறியதாவது:–

உலகில் 30 சதவீத நாடுகள் மட்டுமே பருப்பு மற்றும் எண்ணெய் வித்துகளை உற்பத்தி செய்கின்றன. பிற நாடுகள் அனைத்தும் அதை கொள்முதல் மட்டுமே

செய்து பயன்படுத்துகின்றன. ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக இந்தியாவில் இயற்கை சீற்றங்கள் மற்றும் பல காரணங்களால் பருப்பு உற்பத்தி படிபடியாக குறைந்து வருகிறது.

தற்போது பருப்பு பற்றாக்குறைக்கு மட்டுமே தீர்வுகாண்பது சரி அல்ல, இந்த கூட்டத்தில் பருப்பு மற்றும் எண்ணெய் உற்பத்திக்கு ஒரு நீண்டகால தீர்வு காணப்படும். இவ்வாறு ஏக்நாத் கட்சே கூறினார்.

**புதுவையில் நேற்று மீண்டும் மழை பெய்தது**



புதுவையில் நேற்று மீண்டும் மழை பெய்தது.

மீண்டும் மழை

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக புதுவையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அடை மழை பெய்தது. இந்த மழை காரணமாக தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி புதுவை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக மழை சற்று ஓய்ந்திருந்தது. திடீரென்று நேற்று அதிகாலை மீண்டும் மழை பெய்தது. அதிகாலை தொடங்கிய மழை காலையிலும் நீடித்தது.

15 மி.மீட்டர்

அவ்வப்போது சூரியன் தலைகாட்டியது. இருந்த போதிலும் பகல் முழுவதும் மேக மூட்டமாகவே காணப்பட்டது. இந்த மழை காரணமாக புதுவையில் மீண்டும் வெள்ளப்பாதிப்பு ஏற்படுமோ என்ற அச்சம் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் புதுச்சேரியில் 15மி.மீ. மழை அளவு பதிவாகியுள்ளது.

கோவிலுக்குள் மழை நீர்

மாலையில் லேசாக மழை பெய்தது. இதனால் பள்ளிக் கூடம் முடிந்து வீட்டுக்கு திரும்பிய மாணவ-மாணவிகள் கையில் குடைபிடித்தப்படி வந்தனர். அதேபோல் இருசக்கர வாகனங்களில் சென்றவர்கள் தலையில் தொப்பி, மழை அங்கி ஆகியவற்றை அணிந்தபடி சென்றனர். புதுவை நடேசன் நகரில் உள்ள ஒரு கோவிலில் ஏற்கனவே பெய்த மழையால் மழைநீர் புகுந்து இருந்தது. அந்த மழைநீர் சற்று வடிந்த நிலையில் நேற்று பெய்த மழை காரணமாக மீண்டும் மழைநீர் தேங்கியது. நேற்று நள்ளிரவு மீண்டும் இடியுடன் பலத்த மழை பெய்தது.தொடர்ந்து மழை விட்டு விட்டு பெய்தது.

## சேதமான பயிர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் விவசாயிகளிடம் கவர்னர் உறுதி



மழையால் சேதமான பகுதிகளை கவர்னர் அஜய்குமார்சிங் நேற்று பார்வையிட்டார். அப்போது சேதமடைந்த பயிர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படும் என்று விவசாயிகளிடம் அவர் உறுதி கூறினார்.

மழை சேதம்

புதுவை மாநிலத்தில் தொடர்ந்து பெய்த மழையால் ஏம்பலம் தொகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற்பயிர் நீரில் மூழ்கி சேதமடைந்தது. தாழ்வான இடங்களில் மழைநீர் புகுந்ததால் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் புதுவை கவர்னர் அஜய்குமார்சிங் நேற்று ஏம்பலம் தொகுதிக்கு உட்பட்ட கரிக்கலாம் பாக்கம் கிராமத்தில் பாதிக்கப்பட்ட நெல் வயல்களை பார்வையிட்டார். அப்போது அங்கிருந்த விவசாயிகளிடம் சேதம் குறித்து கேட்டறிந்தார்.

<u>கவர்னரிடம் கோரிக்கை</u>

அப்போது பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். மேலும் அமைச்சர் ராஜவேலு, பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நஷ்டஈடு வழங்க கவர்னரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அப்போது, அங்கிருந்த கலெக்டர் மணிகண்டன், துணை கலெக்டர் ராஜமாணிக்கம், வேளாண் இயக்குனர் ரவிபிரகாசம் ஆகியோரிடம், புதுவை மாநிலத்தின் மழை சேதம் குறித்து கேட்டறிந்தார். மேலும் பாதிப்புகள் குறித்து முழுமையான தகவல்களை வழங்க உத்தரவிட்டார்.

<u>நஷ்டஈடு வழங்கப்படும்</u>

அதனை தொடர்ந்து ஊசுடு தொகுதிக்கு உட்பட்ட அகரம் பகுதியில் சேதமடைந்த நெற்பயிர்களையும், சேந்தநத்தம் பகுதியில் பாதிக்கப்பட்ட வெற்றிலை தோட்டத்தையும் கவர்னர் அஜய்குமார்சிங் பார்வையிட்டார். அப்போது அங்கிருந்த விவசாயிகளிடம், சேதமடைந்த பயிர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படும் என்று உறுதி கூறினார்.

## வால்பாறையில் சீசன் தொடக்கம்: காபி பழங்கள் பறிக்கும் பணி மும்முரம்



வால்பாறை

வால்பாறை பகுதியில் சீசன் தொடங்கியதால் காபி பழங்கள் பறிக்கும் மும்முரமாக நடந்து வருகிறது.

<u>பணப்பயிர்கள்</u>

வால்பாறை பகுதியில் தேயிலை, காபி, ஏலக்காய், மிளகு ஆகிய பணப்பயிர்கள் பயிரிடப்பட்டு உள்ளன. 12 ஆயிரத்து 678 ஹெக்டர் பரப்பளவில் தேயிலை, 4 ஆயிரத்து 517 ஏக்கர் பரப்பளவில் காபி பயிரிடப்பட்டு இருக்கிறது. ஆரம்ப காலத்தில் வால்பாறை பகுதியில் முதன் முதலில் காபி பயிரிடப்பட்டது. காபி ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே பலன்தரக்கூடிய பயிராக இருந்தது. இதனால் ஆண்டு முழுவதும் பயன்தரம் தேயிலை செடிகளை பயிரிட்டனர். எனவே இங்கு தற்போது காபி பயிர் குறைவாகவே காணப்படுகிறது.

<u>காபி பழங்கள் பறிக்கும் பணி</u>

வால்பாறை பகுதியில் அரபிக்கா, ரோபஸ்டோ ஆகிய இரண்டு வகை காபி பயிர் பயிரிடப்பட்டு உள்ளது. இதில் கடந்த ஜனவரி மாதம் இறுதி வாரத்தில் பூத்து காய்க்க தொடங்கிய அரபிக்கா வகை காபி செடிகளில் தற்போது பழங்கள் பழுத்துள்ளன. எனவே காபி தோட்டங்களில் காபி பழங்கள் பறிக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இன்னும் ஒருசில நாட்களில் ரோபஸ்ட்டா வகை காபி செடிகளில் பழங்கள் பழுக்க தொடங்கிவிடும். எனவே வருகிற மார்ச் மாதம் வரை காபி பழங்கள் பறிக்கும் பணி தொடர்ந்து நடைபெறும். பறிக்கப்படும் காபி பழங்கள் அனைத்தும் காபி சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படும்.

பின்னர் காபி பழங்களில் உள்ள பழுத்த தோல்கள் அகற்றப்பட்டு காபி கொட்டைகளை எடுத்து நன்கு காயவைத்து பின்னர் கர்நாடகா மாநிலம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தேனி பகுதியில் உள்ள ஏல மையங்களுக்கு அனுப்பி விற்பனை செய்யப்படுகிறது. தற்போது ஒரு கிலோ காபி கொட்டை ரூ.130 முதல் ரூ.150 வரை விற்பனை செய்யப்படுகிறது.

## பருவமழை பாதிப்பு, முன்எச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆய்வுக்கூட்டம் அரசு செயலாளர் ஹர்மந்தர் சிங் தலைமையில் நடந்தது



கோவை,

கோவை மாவட்டத்தில் பருவமழை பாதிப்பு, முன்எச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆய்வுக்கூட்டம் அரசு செயலாளர் ஹர்மந்தர் சிங் தலைமையில் நடந்தது.

<u>ஆய்வுக்கூட்டம்</u>

கோவை மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழையால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்ட நிவாரண பணிகள், மேற்கொள்ளப்பட வேண்டிய முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது.

கூட்டத்துக்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அரசு செயலருமான ஹர்மந்தர்சிங் தலைமை தாங்கினார். கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் முன்னிலை வகித்தார். அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், ஹர்மந்தர் சிங் பேசியதாவது:–

<u>கட்டணமில்லா தொலைபேசி</u>

கோவை மாவட்டத்தில் பருவமழையால் ஏற்பட்ட சேதங்களுக்கு முதல்–அமைச்சர் உத்தரவின் பேரில் நிவாரண நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் மழையினால் ஏற்படும் சேதங்கள், தொடர்பாக பொதுமக்கள் உடனுக்குடன் தகவல் தெரிவிக்கும் வகையில் கட்டணமில்லா தொலைபேசி எண்– 1077 மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறையில் செயல்பட்டு வருகிறது. இந்த கட்டுப்பாட்டு அறையில் 24 மணி நேரமும் அலுவலக பணியாளர்கள் சுழற்சி முறையில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

<u>பாதுகாப்பு, மீட்பு பணி</u>

இதுபோன்று அனைத்து தாலுகா அலுவலகத்திலும் சேத விவரங்களை பொதுமக்களிடம் இருந்து உடனுக்குடன் பெறும் வகையில் பணியாளர்கள் சுழற்சி முறையில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். மழை வெள்ளத்தால் ஏற்படும் இடர்பாடுகளை அகற்றும் பொருட்டு முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை, தீயணைப்புத்துறை, மின்துறை காவல்துறை மற்றும் உள்ளாட்சித்துறை போன்ற அனைத்து துறை அலுவலர்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும். உடனடியாக பாதுகாப்பு, மீட்பு பணிகளை மேற்கொள்ளவும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>அதிகாரிகள்</u>

கூட்டத்தில் கோவை மாநகராட்சி ஆணையாளர் விஜயகார்த்திகேயன், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ரம்யாபாரதி, மாவட்ட வருவாய் அலுவலர் தா.கிறிஸ்து ராஜ், பொள்ளாச்சி துணை கலெக்டர் ரஷ்மிசித்தார்த் ஜகடே, மாநகர போலீஸ் துணை கமிஷனர் (சட்டம், ஒழுங்கு) நிஷாபார்த்தீபன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பயிர்சேதம் குறித்த கணக்கெடுப்பை 3 நாட்களுக்குள் முடிக்க வேண்டும் நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அதிகாரிகளுக்கு உத்தரவு**



கடலூர்

பயிர்சேதம் குறித்த கணக்கெடுப்பை 3 நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு நிதி அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் உத்தரவிட்டுள்ளார்.

<u>ஆய்வுக்கூட்டம்</u>

கடலூர் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின் படி நிதி அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் உள்பட 6 அமைச்சர்கள் மாவட்டத்தில் 8 நாட்களாக முகாமிட்டு நிவாரணப்பணிகள் மற்றும் சீரமைப்பு பணிகளை நேரில் கண்காணித்து விரைவு படுத்தி வருகிறார்கள்.

இந்த பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் கடலூரில் உள்ள சுற்றுலா மாளிகையில் நிதி அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் நேற்று நடந்தது.

கூட்டத்தில் அமைச்சர்கள் நத்தம் விசுவநாதன், எம்.சி.சம்பத், ஆர்.பி.உதயக்குமார், கே.ஏ.ஜெயபால், ஊரக வளர்ச்சித்துறை செயலாளர் ககன்தீப்சிங்பேடி, கலெக்டர் சுரேஷ்குமார், ஊரக வளர்ச்சித்துறை இயக்குனர் பாஸ்கரன், வேளாண்மை துறை இயக்குனர் ராஜேந்திரன், அருண்மொழிதேவன் எம்.பி. சந்திரகாசி எம்.பி. மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டம் முடிவடைந்ததும் ஊரக வளர்ச்சித்துறை செயலாளர் ககன்தீப்சிங்பேடி கூறியதாவது:–

<u>தொற்றுநோய் பாதிப்பில்லை</u>

மாவட்டத்தில் ஏற்கனவே தற்காலிக முகாம்களில் 72 ஆயிரம் மக்கள் தங்கியிருந்தார்கள். இப்போது மழை குறைந்து வெள்ளம் வடிந்து விட்டதால் மக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பி உள்ளனர். இதனால் தற்போது 2 ஆயிரத்து 100 பேர் மட்டும் முகாம்களில் தங்கி உள்ளனர். அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

சுகாதாரத்துறையின் மூலம் கிராமப்பகுதிகளில் 356 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 31 ஆயிரத்து 789 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

நகர்பகுதிகளில் 8 ஆயிரத்து 525 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதனால் மாவட்டத்தின் எந்த பகுதிகளிலும் தொற்றுநோய் பாதிப்பு இல்லை.

<u>நெசவுத்தறிக்கூடங்கள் பாதிப்பு</u>

மாவட்டம் முழுவதும் 1,467 நெசவாளர்களின் தறிக்கூடங்கள் பாதிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டு நிவாரண உதவிகள் வழங்குவதற்காக முதல்—அமைச்சருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

901 கிராம பகுதிகளில் பயிர் சேதங்கள் குறித்து வேளாண்மை துறை அலுவலர்களால் கண்டறியப்பட்டுள்ளது. அதில் 576 கிராமங்களில் பயிர்சேதம் குறித்து கணக்கெடுக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கிராமங்களில் வருவாய்த்துறை அலுவலர்கள் களஆய்வு செய்து பயிர்சேதம் குறித்து கணக்கெடுக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். பயிர்சேத கணக்கெடுப்பு பணிகளை இன்னும் 3 நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்று நிதி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு ஊரக வளர்ச்சித்துறை செயலாளர் ககன்தீப்சிங்பேடி தெரிவித்தார்.